
விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 27
ஒலி 229 வள்ளுவர் ஆண்டு 2057 ஆடி 20 புதன்கிழமை (05.08.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829


கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## நேற்றைய அகழ்வில் 4 என்புக் கூடுகள்
## செம்மணியில் அடையாளம்



(யாழ்ப்பாணம்)

செம்மணி மனிதப் புதைகுழியில் புதிதாக 4 என்புக் கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வுப் பணிகள் சிறியதொரு கால இடைவெளியின் பின்னர் நேற்று (04) செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்ற

15ஆம் பக்கம் பார்க்க

## பலாலி விமான நிலையத்திற்கு காணி சுவீகரிக்க முயற்சி
### காணி உரிமையாளர்களுடனான கலந்துரையாடலில் குழப்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பலாலி விமான நிலையத்துக்காக சுவீகரிக்கப்பட்ட மற்றும் சுவீகரிக்கப்படவிருக்கின்ற காணிகளுக்கான இழப்பீடு வழங்

16ஆம் பக்கம் பார்க்க



## தமிழ்மக்களின் பிரச்சினையைத் தீர்க்க முழுமையான ஆதரவு
### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் உறுதி



(கொழும்பு)

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்குவதற்கு முழுமையான ஆதரவு வழங்கப்படும் எனத் தமிழ் பேசும் 6 கட்சிகளின் பிரதிநிதிகளிடம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச உறுதியளித்துள்ளார்.

(02 ஆம் பக்கம் பார்க்க)

## காரைநகரில் விபத்து குடும்பஸ்தர் மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் காரைநகரில் இடம்பெற்ற விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

15ஆம் பக்கம் பார்க்க

## இந்திய வெளிவிவகார செயலாளர் விக்ரம் மிஸ்ரி
### இன்று இலங்கை விஜயம்

(கொழும்பு)

இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு இந்திய வெளிவிவகாரச் செயலாளர் விக்ரம் மிஸ்ரி இன்று



02ஆம் பக்கம் பார்க்க

## உதயநிதி கைதாகி விடுதலை

(சென்னை)

தமிழக எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் நேற்றுக் காலை தமிழகப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விசாரணைகளின் பின் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.


குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

காவிரி மற்றும் மேகதாது விவகாரத்தில்



02ஆம் பக்கம் பார்க்க

## நிரந்தர அரசியல் தீர்வு அவசியம்
### இந்திய உயர்ஸ்தானிகரிடம் தமிழ் பேசும் கட்சிகள் வலியுறுத்து



16ஆம் பக்கம் பார்க்க

## குட்டிமணி, தங்கத்துரையின் சிலை அமைப்பதற்கு
### பருத்தித்துறை நீதிமன்றத்தால் மீண்டும் தடை

(கரணவாய்)

வெலிக்கடை சிறையில் படுகொலை செய்யப்பட்ட தமிழீழ விடுதலை இயக்க உறுப்பினர்களான குட்டிமணி, தங்கத்துரை இருவரின் நினைவாக சிலை நிறுவுவதற்கு இன்று புதன்கிழமை வரை பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றம் தற்காலிகத் தடை விதித்துள்ளது.

அவரின் சகோதரரின் சொந்தக் காணியில் இச்சிலையை அமைப்பதற்கு கடந்த

15ஆம் பக்கம் பார்க்க

## மன்னாரில் கஞ்சாவுடன் ஒருவர் கைது

(மன்னார்)

மன்னார் தாழ்வுபாடு கிராமத்தில் கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மன்னார் பொலிஸாருக்கு கிடைக்

15ஆம் பக்கம் பார்க்க

## சீரற்ற வானிலை
## புலமைப்பரிசில், உயர்தர பரீட்சைகள் தொடர்பாக
### இன்று விசேட கலந்துரையாடல்

(கொழும்பு)

நிலவும் சீர்றமான வானிலைக்கு மத்தியில், எதிர்வரும் நாட்களில் நடைபெறவுள்ள தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை மற்றும் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை என்பன தொடர்பாக இன்று விசேட கலந்துரையாடல் ஒன்று நடைபெறவுள்ளது.

15ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறாது ஒலிக்கும் உங்கள் நாளிதழ்

## வீட்டுத்திட்டத்துக்கு நிதியை வழங்குக

# கண்டாவளை பிரதேச செயலகம் முன் பொதுமக்கள் கவனயீர்ப்புப் போராட்டம்



(தருமபுரம்)

சஜித் பிரேமதாஸ அமைச்சராக இருந்த காலத்தில் 2018ஆம் ஆண்டு வழங்கப்பட்ட வீட்டுத் திட்டத்திற்கான நிதியை வழங்க வலியுறுத்தி கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளைப் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த மக்கள் சிலர் நேற்று கண்டாவளை பிரதேச செயலகம் முன்பாக கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

2018ஆம் ஆண்டு தமக்கு தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் வழங்கப்பட்ட வீட்டுத்திட்டமானது இடைநடுவில் கைவிடப்பட்ட நிலையில் தமது நகைகளை அடகு வைத்து தங்களுடைய பணத்தில் ஓரள்வு பூரணப்படுத்தப்பட்ட நிலையில் வாழ்ந்து வருவதாகவும் தற்போது டித்வா புயலினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஐம்பது இலட்சம் ரூபா வீட்டுத்திட்டம் வழங்கப்படுகின்ற நிலையில் அதனுள் தங்களை உள்வாங்கி தமது வீட்டுத்திட்ட மிகுதிப் பணத்தை வழங்குமாறு கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமது கோரிக்கை அடங்கிய மகஜரை கண்டாவளைப் பிரதேச செயலாளர் தங்கவேலாயுதம் பிருந்தாகரனிடம் கையளித்திருந்தனர்.

(ம-7,104,316)

## பிரச்...

எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் தமிழ் பேசும்மக்களின் நலனை முன்னிறுத்தி ஆக்கபூர்வமான முறையில் இணைந்து செயற்படுவதற்கு உடன்பட்டிருந்த இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், இலங்கை முஸ்லிம் காங்கிரஸ், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி மற்றும் தமிழ் முற்போக்குக்கூட்டணி ஆகிய 6 தமிழ் பேசும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் திங்கட்கிழமை (3) பி.ப 4.00 மணிக்கு கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித்தலைவர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இச்சந்திப்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் எம்.ஏ.சுமந்திரன் மற்றும் இரா. சாணக்கியனும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி சார்பில் சுரேஷ் பிரேமச்சந்திரன், பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் மற்றும் முருகேசு சந்திரகுமாரும் இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் மற்றும் நிஸாம் காரியப்பரும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பில் அமீர் அலி, பாராளுமன்ற உறுப்பினர் மொஹமட் தாஹிர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் மொஹமட் தாஹிரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சார்பில் பாராளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமானும் தமிழ் முற்போக்குக் கூட்டணி சார்பில் பாரத் அருள்சாமியும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது புதிய அரசியலமைப்பு உருவாக்கம், நீண்ட காலமாக நிலுவையில் உள்ள மாகாண சபைத் தேர்தலை உடனடியாக நடாத்துதல், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் படையினர் வசமுள்ள தனியார் காணிகளை விடுத்தல் மற்றும் மலையக மக்களுக்கான காணி உரிமையை வழங்கல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் தாம் கொண்டிருக்கும் நிலைப்பாடுகள் குறித்தும், இவை பற்றி ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவிடம் தாம் எடுத்துரைத்த விடயங்கள் குறித்தும் மேற்படி கட்சிகளின் பிரதிநிதிகள் எதிர்க்கட்சித் தலைவரிடம் எடுத்துரைத்தனர்.

அவற்றைச் செவிமடுத்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, மாகாண சபைத் தேர்தல்கள் உடனடியாக நடாத்தப்படுவதையும் மாகாண சபைகளுக்கான முழுமையான அதிகாரங்கள் வழங்கப்படுவதையும் தான் ஆதரிப்பதாகவும் அதற்குரிய ஒத்துழைப்பை வழங்கத் தயாராக இருப்பதாகவும் தமிழ் பேசும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளிடம் உறுதியளித்தார்.

அதேபோன்று இச்சந்திப்பின்போது பேசப்பட்ட ஏனைய விடயங்களையும் ஏற்றுக்கொண்ட சஜித் பிரேமதாஸ, அவற்றை முன்னிறுத்தி பாராளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் முழுமையான ஆதரவை வழங்குவதாகவும் தெரிவித்தார். (ம-7)


பயிலுனர்கள் தேவை

1. வெப் மெசின் பயிலுநர் - (ஆண்கள்)

2. கணனி பக்க வடிவமைப்பு பயிலுநர் - (ஆண்கள்)

❖ இரவுக்கடமை

❖ தகைமையும் விருப்பமும் உள்ளவர்கள் நேரில் வரவும்.

மேலதிக தொடர்புகளுக்கு 076 097 3121

191, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

பொது முகாமையாளர் வலம்புரி


### – சிறுவனுக்கு அதிக கட்டணம் –

# யாழில் தனியார் பேருந்து நடத்துநருக்கு ஒரு வார பணித் தடை

(கரணவாய்)

வடமராட்சி கிழக்கு தனியார் போக்குவரத்து சங்கத்திற்கு உட்பட்ட நடத்துநர் ஒருவர் பத்து வயதிற்கு உட்பட்ட சிறுவன் ஒருவனுக்கு முழு ஆளிற்கான பணம் அறவீடு செய்ததற்காக ஒரு வார பணித்தடை விதிக்கப்பட்டுள்ளது.

சம்பவம்தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

குடத்தனையிலிருந்து மருதங்கேணி சென்ற 10 வயதுடைய சிறுவன் ஒருவனுக்கு வடமராட்சி கிழக்கு தனியார் போக்குவரத்து சங்கத்தினதும் வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையினதும் கட்டுப்பாட்டை மீறி வயது வந்தோர்களுக்கான முழுத் தொகைப்பணம் அறவிட்டதற்காக குறித்த சிறுவனின் தந்தை வடமராட்சி கிழக்கு தனியார் போக்குவரத்து சங்கத்திடம் முறையிட்டதன் பிரகாரம் சங்கம் மேற்கொண்ட விசாரணையின் அடிப்படையில் குறித்த பேருந்து நடத்துநர் சிறுவனுக்கு முழுக் கட்டணம் அறவிடப்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டிருந்த நிலையில் அவருக்கு ஒரு வாரங்கள் நடத்துநர் பணியில் ஈடுபடுவதற்குத் தடை விதித்துள்ளது. (ம-7,60)

## இந்திய...

புதன்கிழமை இலங்கைக்கு வருகை தரவுள்ளார். கொழும்பில் அரசாங்கத்துடன் உயர்மட்டப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதுடன், இலங்கையில் நீடித்து நிலைக்கக்கூடிய இனச்சிக்கலுக்கான தீர்வுகள், பிராந்தியப் பாதுகாப்பு, உத்திசார் இணைப்புத் திட்டங்கள் மற்றும் இருதரப்புப் பொருளாதார உறவுகள் குறித்துக் கலந்துரையாடுவதே இப்பயணத்தின் முதன்மை நோக்கமாக உள்ளது.

தனது விஜயத்தின்போது ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க, பிரதமர் ஹரிணி அமரசூரிய மற்றும் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் ஆகியோரைச் சந்தித்து அவர் விரிவான பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளார்.

இவ்விஜயத்தின் மிக முக்கியமான அம்சமாக, வடக்கு-கிழக்கு மற்றும் மலையகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் அரசியல் கட்சிகளுடனான விக்ரம் மிஸ்ரியின் தனித்தனிச் சந்திப்புகள் அமைகின்றன. அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவதுடன் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களுடன் மாகாண சபைத் தேர்தல்களை விரைவாக நடத்த இந்தியத் தரப்பு கொழும்பு அரசுக்கு அழுத்தம் தர வேண்டும் எனத் தமிழ் தலைமைகள் வலியுறுத்தவுள்ளன. (ம-7)

## உதயநிதி...

தவெக அரசின் செயற்பாட்டைக் கண்டித்து தஞ்சாவூரில் திமுக சார்பில் நேற்று முன்தினம் கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

அதில் கலந்து கொண்டு உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி, முதல்வர் விஜய் மற்றும் தவெக அரசைக் கடுமையாக விமர்சித்திருந்தார்.

இந்நிலையில், கூட்டத்தில் இருந்த சிலர் நடிகை திரிஷாவின்பெயரைத்தொடர்ந்து உரக்க கூறிவந்த நிலையில் அவர் தொடர்ந்து உரையாற்றியிருந்தார்.

இந்நிலையில் உரையின் போது உதயநிதி ஸ்டாலின் தெரிவித்த கருத்துக்கள் முதல்வர் விஜய் மற்றும் நடிகை திரிஷா குறித்து இரட்டை அர்த்ததில் சர்ச்சைக்குரிய வகையில் உள்ளதாகத் தெரிவித்து தவெக அமைச்சர்கள் மற்றும் அரசியல் கட்சியினர் கண்டனம் தெரிவித்ததுடன் ஆங்காங்கே போராட்டங்களிலும் ஈடுபட்டனர்.

இந்நிலையில் இது தொடர்பில் வழக்குப் பதிவு செய்த தஞ்சைப் பொலிஸார் நேற்று காலை 11 மணியளவில் சென்னை நீலாங்கரையில் உள்ள இல்லத்தில் வைத்து உதயநிதி ஸ்டாலினைக் கைது செய்தனர்.

கைதின் பின் தஞ்சாவூர் அழைத்துச் செல்லப்பட்ட உதயநிதியிடம் தஞ்சாவூர் செங்கிப்பட்டி பொலிஸ் நிலை யத்தில் மாலை 6.45 மணிக்குத் தொடங்கிய விசாரணை இரவு 8.10 மணி வரை நீடித்தது. விசாரணை முடிவடைந்த பின் உதயநிதி ஸ்டாலின் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டார். (ம-7)

*(முன்னர் வந்த செய்தி உள்ளே)*


பழைய பத்திரிகைகள் விற்பனைக்கு

பார்சல் கட்டுதல் உள்ளிட்ட தேவைகளுக்குரிய பழைய பத்திரிகைகள் தேவையானவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளலாம்.

மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்கப்படும்.

தொடர்பு : 075 719 0110


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வீதி விபத்துக்களை கட்டுப்படுத்த

# உந்துருளிகளுக்கு தனிப்பாதை



**(கொழும்பு)**

**நாட்டில் மோட்டார் சைக்கிள் தொடர்பான வீதி விபத்து களின் எண்ணிக்கையைக் குறைக்கும் நோக்கில், இலங்கை முழுவதும் உள்ள முக்கிய வீதிக ளில் மோட்டார் சைக்கிள்களுக்கென பிரத்தியேகப் பாதைகளை அறிமுகப் படுத்த அரசாங்கம் திட்ட மிட்டுள்ளதாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பிமல் ரத்நாயக்க அறிவித்துள்ளார்**

இலங்கையில் ஆண்டு தோறும் பதிவாகும் வீதி விபத்துகளில் பெரும்பாலா னவை மோட்டார் சைக்கிள் விபத்துகளே என்று சுட்டிக் காட்டிய அவர், வீதிப் பாது காப்பை மேம்படுத்துவதற்கான முக்கிய நடவடிக்கையாக இதற் கெனத் தனிப் பாதைகளை அறிமுகப்படுத்துவது அமையும் என்றும் குறிப்பிட்டார்.

இலங்கையில் ஆண்டு தோறும் சுமார் 2,500 பேர் வீதி விபத்துக்களால் உயிரிழக் கின்றனர்.

2025 ஆம் ஆண்டில் இந்த எண்ணிக்கை சுமார் 2,750 ஐ எட்டியது.

மேலும், 2019 ஆம் ஆண் டில் மட்டும் சுமார் 1,400 மோட் டார் சைக்கிள் சாரதிகளும், பின்னால் அமர்ந்து பயணித்த வர்களும் உயிரிழந்துள்ள னர். கடந்த காலங்களில் மோட் டார் சைக்கிள் தொடர்பான விபத்துக்களில் சுமார் 9,000 பேர் உயிரிழந்துள்ளனர்.

நாட்டில் வீதி விபத்துக் களால் ஏற்படும் உயிரிழப் புகளைக் குறைக்க, மோட்டார் சைக்கிள் பாதுகாப்பை உறுதி செய்வது மிக அவசியம்.

இந்த முன்னோடித் திட் டத்தின் ஒரு பகுதியாக, களு வாஞ்சிகுடியில் உள்ள பிரதான சாலையின் ஒரு பகுதி மோட் டார் சைக்கிள்களுக்கென பிரத் யேகமாக ஒதுக்கப்படவுள்ளது.

அப்பகுதியில் மோட்டார் சைக்கிள்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதை கருத் தில் கொண்டு, வழக்கமான பாதை அடை யாளங்களுக்குப் பதிலாக, வீதித் தடுப்புகளைப் பயன்படுத்தி இந்தப் பிரத்தி யேகப் பாதை மற்ற வாகனப் பாதை களிலிருந்து நேரடியாகப் பிரித்து அமைக்கப்படும் என் றும் அமைச்சர் தெரிவித் தார்.(நி)

# சீரற்ற வானிலையால் 6 பேர் உயிரிழப்பு

## ஒருவர் மாயம்



(ஹற்றன்)

சப்ரகமுவ மாகாணம் மற்றும் கண்டி, நுவரெலியா மாவட்டங்களில் தொடர்ந்து நிலவி வரும் சீரற்ற வானிலை காரணமாக இது வரையில் குறைந்தது 6 பேர் உயிரிழந்துள்ளதாக பொலி ஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும், வெள்ளப் பெருக் கில் சிக்கி ஒருவர் அடித்துச் செல்லப்பட்டு காணாமல் போயுள்ளார் எனவும் பொலி ஸார் அறிவித்துள்ளனர்.

நுவரெலியா மாவட்டம் ஹற்றன் பகுதியில் பெய்த கனமழையால் ஏற்பட்ட திடீர் மண்சரிவு காரணமாக வீடொ ன்றின் மீது மண்மேடு சரிந்து விழுந்ததில் ஒரே குடும்ப த்தைச் சேர்ந்த 4 பேர் உயிரிழ ந்துள்ளனர்.

வெள்ளநீரின் வேகம் அதி கரித்த காரணத்தால் அடித்துச் செல்லப்பட்ட ஒருவரைத் தேடும் பணிகள் தொடர்ந்து தீவிரமாக நடைபெற்று வரு கின்றன.

சீரற்ற வானிலையால் நுவரெலியா மாவட்டத்தில் மட்டும் 581 குடும்பங்களைச் சேர்ந்த 2,300 இற்கும் மேற் பட்ட மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதுடன், பலர் நலன்புரி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

மலையகப் பகுதிகளில் தொடர்ந்தும் கனமழையும் மண்சரிவு அபாயமும் நில வுவதால், ஆற்றங்கரையோ ரங்கள் மற்றும் மலைப்பாங் கான பகுதிகளில் வாழும் மக்கள் தொடர்ந்து விழிப்புடன் இருக்குமாறு பொலிஸாரும் அனர்த்த முகாமைத்துவ மத் திய நிலைய அதிகாரிகளும் கேட்டுக்கொண்டுள்ளனர்.(நி)

# 87 ஆயிரத்தைக் கடந்த டெங்கு நோயாளர்கள்

(கொழும்பு)

கடந்த ஆண்டில் பதிவான டெங்கு நோயாளிகளின் எண் ணிக்கை 87,000ஐ நெருங் கியுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித் துள்ளது.

அதன்படி, நேற்று முன் தினம் நிலவரப்படி, நாட்டில் பதிவான டெங்கு நோயாளி களின் எண்ணிக்கை மேலும் அதிகரித்து 86,947 ஆக உயர் ந்துள்ளதாக அப்பிரிவு கூறியது.

ஓகஸ்ட் மாதத்தில் இது வரை 1,598 டெங்கு நோயாளி கள் பதிவாகியுள்ளனர்.

தற்போது கம்பஹா மாவட் டத்தில்தான் அதிகபட்ச டெங்கு நோயாளிகள் பதிவாகி யுள்ளனர்.

இது சதவீத அடிப்படை யில் 21.24% ஆகும். இதற் கிடையில், கொழும்பு மாவட் டத்தில் 17,187 டெங்கு நோயா ளிகளும், கண்டியில் 6,082 நோயாளிகளும் பதிவாகி யுள்ளனர்.

இதுவரை, 62 டெங்கு மர ணங்கள் பதிவாகியுள்ளன. இது சதவீத அடிப்படையில் 0.07% ஆகும். (நி)


# INVITATION FOR BID 2026/01 DELFT PRADESHIYA SABHA PSDG - 2026

1. The **Chairman, Local Authority Procurement Committee,** on behalf of the Delft Pradeshiya Sabha invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below. All the projects will be funded via Council.
2. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB)**.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of highway construction for grade mentioned in the table below.
   Qualification' requirements are indicated in section 4 of the **Procurement document.** Additional details are provided in the Bidding Data & Contract Data (Section 5) for SBD 3 Documents.
4. Interested bidders may obtain further information from **address given below in 6** and inspect the Procurement documents at the same place on any working days from **2026-08-05 To 2026-08-18** during **09:00 hrs and 14:00 Hrs.**
5. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Secretary, Delft Pradeshiya Sabha (T. P:0212215211, e.mail: tsecretarydelft@yahoo.com) from 9:00 hrs to 14:00 Hrs. during the period stated in table below upon payment of non-refundable fees as mentioned in the table below.** The method of payment will be by cash.
6. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the **Chairman, Local Authority Procurement Committee, Delft Pradeshiya Sabha on or before as stated in table below.** Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
7. Pre-Bid Conference will be held at **Conference Hall, Delft Pradeshiya Sabha as stated in table below.**
8. Bids shall be accompanied by a Bid security/ Refundable cash Deposit/ Bank Draft as per the information given in the Tables.

| | | |
|---|---|---|
| | Document Issuing/Purchasing Period | from 2026-08-05 To 2026-08-18 |
| | Pre-Bid Conference | At 10.30 A.M on 2026-08-12 |
| | Closing and Opening of Bids | At 2.30 P.M on 2026-08-19 |

| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Grade Required | Non-Refundable Fee (Rs.) | Bid Validity: Bid Validity Period | Bid Validity: Bid Validity date | Required Bid Security/ Bank Draft/ Security Deposit: bid Security Amount (Rs.) | Required Bid Security/ Bank Draft/ Security Deposit: bid Security Validity Period |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| PSDG/NP/JAF/DPS/2026/CWS/01 | Establishment of Rain Water Harvesting and Purification Centre at Delft – Stage-II | 4.12 | 120 | C8, C7 & C6 (Building) | 3000.00 | 49 days | 07.10.2026 | 42,000.00 | 04.11.2026 |

**Chairman**
**Local Authority Procurement Committee,**
**Delft Pradeshiya Sabha,**
**05.08.2026**

(C-6168)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஓகஸ்ட் மாத இராசி பலன்கள்

## (01.08.2026-31.08.2026 வரை)



(மகம், பூரம், உத்திரம் 1ஆம் பாதம்)

## உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை

**கிரகநிலை-** இராசியில் சுக்கிரன், கேது - களத்திர ஸ்தானத்தில் ராகு, சந்திரன் - அஷ்டம ஸ்தானத்தில் சனி - தொழில் ஸ்தானத்தில் செவ்வாய் - இலாப ஸ்தானத்தில் சூரியன், புதன், குரு என கிரக நிலைகள் உள்ளன.

**பலன்கள்:** இயல்பிலேயே மற்றவர்களை அதிகாரம் செய்வதில் பிரியமுடைய சிம்ம இராசியினரே, இந்த மாதம் வீண் செலவு ஏற்பட்டாலும் அதை சமாளிக்கும் விதத்தில் வரவும் இருக்கும். பயணங்கள் மூலம் அலைச்சல் அதிருப்தி உண்டாகலாம். கனவுகளால் தொல்லை ஏற்படலாம். சரியான நேரத்தில் தூங்க முடியாத சூழ்நிலை உருவாகும். உஷ்ண சம்பந்தமான நோய் உண்டாகலாம். கவனமாக இருப்பது நல்லது.

தொழில் வியாபாரத்தில் பணத் தேவை ஏற்படலாம். கடன் விவகாரங்களில் கவனமாக செயற்படுவது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்கள் ஓய்வு இல்லாமல் பணியாற்ற வேண்டி இருக்கும். இயந்திரம், நெருப்பு, ஆயுதத்தை பயன்படுத்துவோர் மிகவும் கவனமாக இருப்பது அவசியம். குடும்பத்தில் தேவையற்ற பிரச்சினைகள் உருவாகலாம். கணவன், மனைவிக்கிடையே கருத்து வேற்றுமை ஏற்பட்டாலும் பின்னர் அது சரியாகி விடும்.

வீடு, வாகனம் தொடர்பான செலவுகள் உண்டாகலாம். பிள்ளைகளுக்காக கூடுதல் செலவு செய்ய வேண்டி இருக்கும். உறவினர்களிடம் கவனம் தேவை. பெண்கள் மற்றவர்களின் வேலைகளுக்காக அலைய நேரிடும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

மாணவர்களுக்கு கல்வியை தவிர மற்றவைகளில் கவனத்தை சிதற விடும் நிலைமை ஏற்படலாம்.




வாகனங்களில் செல்லும் போதும் எச்சரிக்கையாக செல்வது நல்லது.

**மகம்:** இந்த மாதம் நல்ல பெயர் வாங்குவீர்கள். மூலதனத்திற்குத் தேவையான பணம் வந்து குவியும். எதிரிகள் தொடர்பாக சற்று கவனமுடன் செயற்படவும். அதனை சரியாக பயன்படுத்திக் கொள்ளவும்.

**பூரம்:** இந்த மாதம் சுக்கிரன் சஞ்சாரத்தால் கலைத்துறைகளைச் சார்ந்த துறைகளில் ஈடுபட்டு இருப்பவர்கள் நல்ல முன்னேற்றம் காண்பர். புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கப் பெறுவீர்கள். பிற மொழி பேசுபவர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும்.

**உத்திரம் 1ஆம் பாதம்:** இந்த மாதம் உங்கள் நிலைமை மாறும். நீங்கள் விரும்பியதை கேட்டு பெற்றுக்கொள்ளலாம். வேலை இல்லாதவர்களுக்கு வேலை கிடைக்கும். பொதுத் துறைகளில் வேலை செய்பவர்களுக்கு தகுந்த முன்னேற்றம் கிடைக்கும். பள்ளி, கல்லூரிகளில் பணிபுரிபவர்களும் நற்பலன்கள் கிடைக்கப் பெறுவார்கள். பதவி உயர்வு கிடைக்கும்.

**பரிகாரம்:** சிவபெருமானை வணங்கி வர துன்பங்கள் விலகும். மன நிம்மதி குடும்பத்தில் குதூகலம் உண்டாகும்.

**சந்திராஷ்டம தினங்கள்:** 3, 4, 30, 31

**அதிர்ஷ்ட தினங்கள்:** 23, 24



(உத்திரம் 2, 3, 4ஆம் பாதங்கள், அஸ்தம், சித்திரை 1, 2, பாதங்கள்)

## குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும்

**கிரகநிலை-** ரண ருண ரோக ஸ்தானத்தில் ராகு, சந்திரன் - களத்திர ஸ்தானத்தில் சனி - பாக்கிய ஸ்தானத்தில் செவ்வாய் - தொழில் ஸ்தானத்தில் சூரியன், புதன், குரு - அயன சயன போக ஸ்தானத்தில் சுக்கிரன், கேது என கிரக நிலைகள் உள்ளன.

**பலன்கள்:** சுத்தம், சுகாதாரம் சுகமான வாழ்க்கை என்பதில் கவனமாக இருக்கும் கன்னி இராசியினரே, இந்த மாதம் எல்லா வற்றிலும் சாதகமான பலனே கிடைக்கும். பொருளாதார முன்னேற்றம், பண வரவில் திருப்தி ஆகியவை இருக்கும். எடுத்த காரியத்தை சிறப்பாக செய்து முடிப்பீர்கள். உடல் ஆரோக்கியம் உண்டாகும். தொழில் வியாபாரத்தில் இருந்த தொய்வு நீங்கி வேகம் பிடிக்கும். எதிர்பார்த்த ஓடர் கிடைக்கும். இலாபம் கூடும்.

உத்தியோகத்தில் இருப்பவர்களின் செயற்திறன் அதிகரிக்கும். மேல் அதிகாரிகளின் பாராட்டும், பதவி உயர்வும் கிடைக்கும். புதிய வேலை தேடுபவர்களுக்கு சாதகமான பலன் கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். கணவன் மனைவிக்கிடையே ஒற்றுமை உண்டாகும். பிள்ளைகள் மூலம் பெருமை ஏற்படும். உறவினர்கள் வருகையும் அவர்களால் நன்மையும் உண்டாகும்.

திருமணம் தொடர்பான பேச்சுகள் சாதகமாக முடியும். வீடு, வாகனம் வாங்குவது அல்லது புதுப்பிப்பதில் நாட்டம் அதிகரிக்கும். பெண்கள் எடுத்த காரியத்தை திறமையாக செய்து முடிப்பீர்கள். பணப்புழக்கம் திருப்தி தரும். மதிப்பு மரியாதை அதிகரிக்கும். மாணவர்களுக்கு கல்வி பற்றிய கவலை நீங்கும். பாடங்கள் படிப்பதில் வேகம் காட்டுவீர்கள். பாராட்டு கிடைக்கலாம்.

**உத்திரம் 2, 3, 4ஆம் பாதங்கள்:** இந்த மாதம் எதிர்பார்




த்த காரியங்கள் உங்களுக்கு சாதகமாக இருக்கும். குடும்பத்தில் சுப காரியங்கள் நிகழும். வேலை தேடிக் கொண்டிருந்தவர்களுக்கு நல்ல சம்பளத்துடன் வேலை கிடைக்கும். வெளிநாட்டிலிருந்து நல்ல தகவல்கள் வந்து சேரும்.

**அஸ்தம்:** இந்த மாதம் அலைச்சல் இருக்கும். சிலர் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முடியாமல் திண்டாட வேண்டிய நிலை ஏற்படலாம். உங்கள் குழந்தைகளால் சிற்சில பிரச்சினைகள் வரலாம். அதற்காக உங்களின் குழந்தைகள் மேல் ஆத்திரம் கொள்ள வேண்டாம். உத்தியோகஸ்தர்கள் வேலையில் வரும் கஷ்டங்களை தாங்கிக் கொள்ளுங்கள்.

**சித்திரை 1, 2ஆம் பாதங்கள்:** இந்த மாதம் தம்பதிகளிடையே அன்பும் பாசமும் அதிகரிக்கும். கருத்துக்களை பரிமாறும் முன் பொறுமை மற்றும் நிதானம் அவசியம் என்பதை உணருங்கள். திருமணமாகாமல் அதற்குண்டான முயற்சிகளில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு திருமணம் இனிதே நடந்தேறும். புதிதாக வீடு, மனை வாங்க வேண்டும் என்று யோசனை செய்தவர்களின் எண்ணம் ஈடேறும்.

**பரிகாரம்:** இலட்சுமி நரசிம்ம பெருமாளை வணங்கி வர எதிர்ப்புகள் நீங்கும். தொழிற் போட்டிகள் குறையும்.

**சந்திராஷ்டம தினங்கள்:** 5, 6

**அதிர்ஷ்ட தினங்கள்:** 25, 26, 27

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஆதனப் பெயர் மாற்றம்

யாழ் மாநகர சபைக்குட்பட்ட வட்டாரம் 08, மணிக்கூட்டு ஒழுங்கையில் அமைந்துள்ள 19/3, என்னும் ஆதனம் எமது ஆதனப்பதிவேட்டில் S. ஆறுமுகம் பெண் பூமணி எனப் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம் பெரியதம்பி கதிர்வேலுவும், கதிர்வேலு சுப்பிரமணியமும் என்பவரும் பிரசித்த நொத்தாரிசு V.S சோமசுந்தரம் முகதாவில் 1957.02.27ஆம் திகதி 1276ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் சின்னப்பு ஆறுமுகம் பெண் பூமணிக்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனம் இல. 05 மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியை சேர்ந்த சின்னப்பு ஆறுமுகம் என்பவர் யாழ்ப்பாண பிரசித்த நொத்தாரிசு ஜெயசித்திரா சிறீதரன் முகதாவில் 2019.04.09ஆம் திகதி 3665ஆம் இலக்க நன்கொடை உறுதி மூலம் ஆறுமுகம் குணசீலனுக்கு வழங்கியுள்ளார்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப் பகுதி, வண்ணார்பண்ணை கோவிற்பற்று, வண்ணார்பண்ணை கிழக்கு இறை.

நல்லூர் பிரதேச செயலகப் பகுதியில் யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட J/104 கிராம சேவகர் பிரிவில் உள்ள "பெரிய வளவு" நிலப்பரப்பு 04 குளி 9. 3/8 வீடும் கிணறும் பயிர்களும் ஆனால் இது தற்போது உத்தரவு பெற்ற நில அளவையாளர் T. தங்கராஜா அவர்களால் 2019.04.06ஆம் திகதி 10650ஆம் இலக்கத்தில் அளந்த நில அளவைப் படத்தில் லொட் 1 தொடக்கம் லொட் 9 வரை என காட்டப்பட்டுள்ளதன் படி நிலப்பரப்பு 04. குளி 7.43 இதில் லொட் 8 எனக் காட்டப்பட்ட பாகம் குளி பதின்மூன்று தசம் ஐந்து நான்கு (குளி 13.54) வீடும் கிணறும், இந்தக் குளி 13.54இற்கும் எல்லைகள்.

**கிழக்கு** - லொட் 9 என்ற பாகம்
**வடக்கு** - லொட் 9 என்ற பாகம்
**மேற்கு** - லொட் 6, லொட் 3, லொட் 4, என்ற இந்த முழு ஆதனத்தில் இருந்து விடப்பட்ட பாதைகள்.
**தெற்கு** - லொட் 5 என்ற இந்த முழு ஆதனத்தில் இருந்து விடப்பட்ட பாதை.

இதடங்கலும் இன்னும் லொட் 6, லொட் 3, லொட் 4, லொட் 5, என்ற இந்த முழு ஆதனத்தில் இருந்து விடப்பட்ட பாதைகளில் இதற்குரிய பங்கும் போக்குவரத்து உரித்தும் இந்த ஆதனத்தில் இருக்கும் கிணற்றில் மறு காணிக்காரர்களுக்குரிய கிணற்றுப் பங்கு புற நீங்களாக மிகுதியடங்கலும்.

தற்போது இவ்வாதனத்தை ஆறுமுகம் குணசீலன் என்பவர் தனது பெயரை எமது ஆதனப்பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு முழுமையாகவோ அல்லது பகுதி அளவிலோ உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாத காலத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது ஆறுமுகம் குணசீலன் என்னும் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றம் செய்வதால் எழக்கூடிய எப்பொறுப்பிற்கும் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முதல்வர், மாநகரசபை. (C-6167)

# வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம் ஆதனப் பெயர் மாற்றம்

## ஆதன இலக்கம் N-135, கனகரத்தினம் வீதி, வட்டாரம் 08

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் வட்டுக்கோட்டை உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 08, கனகரத்தினம் வீதி , ஆதன இலக்கம் N135 என்ற ஆதனத்திற்கான ஆதன வரிப்பதிவேட்டில் VADDUKKODDAI WEST TABBACCO SOCIETY என்ற பெயர் காணப்படுகின்றது. குறித்த ஆதனத்திற்கு பெயர்மாற்றத்திற்காக குணசீலன் யோகினி (முன்னர் அம்பலவாணர் மகள் யோகினி) என்பவர் விண்ணப்பித்துள்ளார்.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனமானது ஆரம்பத்தில் கொழும்பு வலய பிரசித்த நொத்தாரிசு பெருமையினார் வரதராஜா சிறிறங்கன் முன்பாக 06.12.2002 திகதியில் 1789 ஆம் இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட வெளிப்படுத்தல் உறுதியின் பிரகாரம் வேலுப்பிள்ளை மனோகரன் என்பவர் தனது நீண்டகால தங்குதடையற்ற ஆட்சிக்குட்பட்ட ஆதனம் என வெளிப்படுத்தியிருந்தார். அதன் பின்னர் வேலுப்பிள்ளை மனோகரன் குறித்த ஆதனத்தினை அம்பலவாணர் குகராஜனுக்கும் பெண் வித்தியாவுக்கும் பிரசித்த நொத்தாரிசு பொ.சுந்தரலிங்கம் முகதாவில் 03.06.2011 திகதியில் 3268 ஆம் இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட அறுதி உறுதியால் அயாக வழங்கியிருந்தார். அம்பலவாணர் குகராஜனும் பெண் வித்தியாவும் குறித்த ஆதனத்தினை பிரசித்த நொத்தாரிசு பொ.சுந்தரலிங்கம் முகதாவில் 05.03.2022 திகதியில் 6101 ஆம் இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட நன்கொடை உறுதியால் அம்பலவாணர் மகள் யோகினிக்கு நன்கொடையாக வழங்கியிருந்தனர். இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் எஸ். சிவராஜா அவர்களால் 2019.04.22 திகதியில் அளக்கப்பட்டு 2019.04.23 திகதியில் தயாரிக்கப்பட்ட 1131 ஆம் இலக்கப் படத்தில் துண்டு 1 எனச் சுட்டப்பட்டுள்ள ஆதனமாகும்.

குறித்த ஆதனத்தின் விபரம் வருமாறு:

ஆதனப்பெயர் : **கட்டுப்புலம் கடவையும் உளானையும்**
இறை : வட்டுக்கோட்டை தென்மேற்கு இறை
விஸ்தீரணம் : நிலப்பரப்பு 06 குளி 13.17

எல்லைகள் **கிழக்கு:** அம்பலவாணர் தங்கேஸ்வரனினாதனம், **வடக்கு:** கனகரத்தினம் வீதி, **மேற்கு:** கனகரத்தினம் வீதி, **தெற்கு:** காசிநாதன் சோதிநாதனினதும் அம்பலவாணர் பெண் பத்மினிதேவியினதும் ஆதனங்கள்

இவ் ஆதனப் பெயர்மாற்றம் தொடர்பாக யாராவது ஆட்சேபனை இருப்பின் உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது குணசீலன் யோகினி (முன்னர் அம்பலவாணர் மகள் யோகினி) என்பவருக்கு பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர்மாற்றத்தால் வரக்கூடிய எந்த பொறுப்பிற்கும் வலிமேற்கு பிரதேச சபை பொறுப்பாளியல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**தவிசாளர் / செயலாளர், வலிகாமம் மேற்கு பிரதேசசபை.**

# வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம் ஆதனப் பெயர் மாற்றம்

## ஆதன இலக்கம் 63,61, சீக்காய் வீதி, வட்டாரம் 6

வலிகாமம் மேற்கு பிரதேசசபையின் வட்டுக்கோட்டை உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 6, சீக்காய் வீதி, ஆதன இலக்கம் **63, 61** என்ற ஆதனங்களிற்கான ஆதன வரிப்பதிவேட்டில் சங்கரப்பிள்ளை சிவஞானம் என்ற பெயர் காணப்படுகின்றது. குறித்த ஆதனத்திற்கு பெயர்மாற்றத்திற்காக இராமலிங்கம் சத்தியலிங்கம் பெண் சுஜாதா ( முன்னர் பரமானந்தம் மகள் சுஜாதா) என்பவர் விண்ணப்பித்துள்ளார்.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனம் ஆரம்பத்தில் பிரசித்த நொத்தாரிசு ஆ.குமாரசுவாமி முன்பாக 1998.12.05 திகதியில் 5925 இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட வெளிப்படுத்தல் உறுதியால் பொன்னையா பரமானந்தமும் பெண் பரமேஸ்வரியும் ஆகியோர்களால் தமது நாற்பது வருடங்களுக்கு மேற்பட்ட ஆட்சிக்குரிய ஆதனம் என வெளிப்படுத்தப்பட்டிருந்தது. பொன்னையா பரமானந்தத்தின் இறப்பின் பின்னர் பரமேஸ்வரி தனது மகளான இராமலிங்கம் சத்தியலிங்கம் பெண் சுஜாதா (முன்னர் பரமானந்தம் மகள் சுஜாதா) விற்கு குறித்த ஆதனத்தினை பிரசித்த நொத்தாரிசு ஆ.குமாரசுவாமி முகதாவில் 2003.10.01 திகதியில் 7364ஆம் இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட நன்கொடை உறுதி மற்றும் பிரசித்த நொத்தாரிசு பொ.சுந்தரலிங்கம் முகதாவில் 2013.12.12 திகதியில் 4233ஆம் இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட நன்கொடை உறுதியால் நன்கொடையாக வழங்கியிருந்தார்.

(ஆதன இலக்கம் 61 ) இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் S.நிவேஜன் அவர்களால் 2026.05.06 திகதியில் அளக்கப்பட்டு 017 ஆம் இலக்கத்தில் தயாரிக்கப்பட்ட படத்தில் துண்டு 1 எனச் சுட்டப்பட்டுள்ளது.

குறித்த ஆதனத்தின் விபரம் வருமாறு:

ஆதனப்பெயர் : **சீக்காய்**
இறை : தொல்புரம் இறை
விஸ்தீரணம் : நிலப்பரப்பு 5 குளி 06.25

எல்லைகள் **கிழக்கு:** 3 மீற்றர் அகல பாதை, **வடக்கு:** சீக்காய் வீதி, **மேற்கு:** இராமமூர்த்தி சிவகுமாரினாதனம், **தெற்கு:** சுஜாதா பரமானந்தம் மற்றும் பரமானந்தம் தனபாலனினாதனமும்

(ஆதன இலக்கம் 63) இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் S.பாலேந்திரன் அவர்களால் 2013.11.16 திகதியில் அளக்கப்பட்டு 2013.11.30 திகதியில் 2013/4/188 ஆம் இலக்கத்தில் தயாரிக்கப்பட்ட படத்தில் துண்டு 1 எனச் சுட்டப்பட்டுள்ளது.

குறித்த ஆதனத்தின் விபரம் வருமாறு:

ஆதனப்பெயர் : **சீக்காய்**
இறை : தொல்புரம் இறை
விஸ்தீரணம் : நிலப்பரப்பு 8 குளி 0.43

எல்லைகள் **கிழக்கு:** பரமேஸ்வரி பரமானந்தத்தினாதனமும், நவலோகநாயகி சிறீதரனினாதனமும், **வடக்கு:** 3 மீற்றர் அகல பாதையும், சுஜாதா பரமானந்தத்தினாதனமும் **மேற்கு:** சிறீரஞ்சியினாதனமும், பிரியவர்தனா அப்புகாமியினாதனமும், உஷாந்தினி சிவலிங்கத்தினாதனமும், **தெற்கு:** கார்த்திப்பிள்ளை ஜெகநாதனினாதனமும், கந்தையா இராசரத்தினத்தினாதனமும்.

இவ் ஆதனப் பெயர்மாற்றம் தொடர்பாக யாராவது ஆட்சேபனை இருப்பின் உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது இராமலிங்கம் சத்தியலிங்கம் பெண் சுஜாதா (முன்னர் பரமானந்தம் மகள் சுஜாதா) என்பவருக்கு பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர்மாற்றத்தால் வரக்கூடிய எந்தப் பொறுப்பிற்கும் வலிமேற்கு பிரதேச சபை பொறுப்பாளியல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**தவிசாளர் / செயலாளர், வலிகாமம் மேற்கு பிரதேசசபை.** (8309)

# வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம் ஆதனப் பெயர் மாற்றம்

## ஆதன இலக்கம் 51/4, சீக்காய் வீதி, வட்டாரம் 6

வலிகாமம் மேற்கு பிரதேசசபையின் வட்டுக்கோட்டை உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 6, சீக்காய் வீதி ஆதன இலக்கம் 51/4 என்ற ஆதனத்திற்கான ஆதன வரிப்பதிவேட்டில் சங்கரப்பிள்ளை சிவஞானம் என்ற பெயர் காணப்படுகின்றது. குறித்த ஆதனத்திற்கு பெயர்மாற்றத்திற்காக பரமானந்தம் மகள் சுஜாதா என்பவர் விண்ணப்பித்துள்ளார்.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனம் ஆரம்பத்தில் பிரசித்த நொத்தாரிசு ஆ.குமாரசுவாமி முன்பாக 2003.09.28 திகதியில் 7351 இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட வெளிப்படுத்தல் உறுதியால் பரமானந்தம் கைம்பெண் பரமேஸ்வரி என்பவரால் தனது நாற்பது வருடங்களுக்கு மேற்பட்ட ஆட்சிக்குரிய ஆதனம் என வெளிப்படுத்தப்பட்டிருந்தது. பின்னர் பரமானந்தம் மகள் சுஜாதாவிற்கு குறித்த ஆதனத்தினை பிரசித்த நொத்தாரிசு பொ.சுந்தரலிங்கம் முகதாவில் 12.12.2013 திகதியில் 4232 ஆம் இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட நன்கொடை உறுதியால் நன்கொடையாக வழங்கியிருந்தார்.

குறித்த ஆதனத்தின் விபரம் வருமாறு:

ஆதனப்பெயர் : **சீக்காய்**
இறை: தொல்புரம் இறை
விஸ்தீரணம் : நிலப்பரப்பு 5 குளி 06.25


எல்லைகள் **கிழக்கு:** சீவரத்தினம் பெண் மீனாகுமாரியினாதனம், **வடக்கு:** தவலோகநாயகி சிறீதரனினாதனம், **மேற்கு:** பரமேஸ்வரி பரமானந்தத்தினாதனம், **தெற்கு:** கந்தையா இராசரத்தினத்தினாதனமும், ஒழுங்கையும்.

இவ் ஆதனப் பெயர்மாற்றம் தொடர்பாக யாராவது ஆட்சேபனை இருப்பின் உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது பரமானந்தம் மகள் சுஜாதா என்பவருக்கு பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர்மாற்றத்தால் வரக்கூடிய எந்தப் பொறுப்பிற்கும் வலிமேற்கு பிரதேச சபை பொறுப்பாளியல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்

**தவிசாளர் / செயலாளர், வலிகாமம் மேற்கு பிரதேசசபை.** (8310)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்லப்பாசுவாமி குருபூசை



(நல்லூர்)

நல்லூர்தேரடிச் சித்தர் செல்லப்பா சுவாமிகளின் மாதாந்த குரு பூசை நிகழ்வு, நல்லூரில் அமைந்துள்ள சுவாமிகளின் நினைவாலயத்தில் இன்று புதன்கிழமை நடைபெறவுள்ளது.

அபிஷேகம், திருமுறை நற்சிந்தனை ஓதல் என்பவற்றைத் தொடர்ந்து, காலை 10.30 மணிக்கு "எண்ணில் தவம்" எனும் தலைப்பில், ஓய்வுநிலை ஆசிரியை சிவசக்தி உரையாற்றவுள்ளார். (8)

# நல்லூர் மகோற்சவகாலத்தில் சிவகுரு ஆதீனத்தின் பஜனை நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தப்பெருமான் மகோற்சவ காலத்தில் மாணவர்களிடையே ஆன்மீக விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாகவும் இறைபக்தியை அதிகரிக்கும் முகமாகவும் நடத்தப்படுகின்ற பஜனை நிகழ்வு வழமை போல இவ் வருடமும் சிவகுரு ஆதீனத்தின் ஏற்பாட்டில், ஆதீனமுதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகளின் வழிகாட்டலில் இடம்பெறும்.

பஜனை கொடியேற்றத் திருவிழாவில் இருந்து (17/08/2026) கொடியிறக்கத் திருவிழா வரை (10/09/2026) முருகப்பெருமான் காலையில் உள் வீதி வலம் வரும்போதும் மாலையில் வெளிவீதிவலம் வரும் போதும் நடைபெறும்.

பஜனையில் பங்குபற்ற விரும்புவோர் 077 222 0103 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு சிவகுரு ஆதீனம் அறிவித்துள்ளது. (8)



எழுத்தாளர் விக்டர் ராஜலிங்கம் எழுதிய "உலகின் மூத்த மொழி தமிழ் மொழி " என்ற நூலின் வெளியீட்டு விழா கடந்த சனிக்கிழமை நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் செஞ் சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் இடம்பெற்றது.

# இலவச சித்த மருத்துவ முகாம்

(பருத்தித்துறை)

தேசிய முதியோர் செயலகத்தின் நிதி அனுசரணை மற்றும் வழிகாட்டலில்

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகமும் கைதடி சித்த போதனா வைத்தியசாலையும் இணைந்து நடாத்தும் முதியோர்களுக்கான இலவச மருத்துவ பரிசோதனை மற்றும் வைத்திய சிகிச்சை ஆகியன நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு குடத்தனை நற்தூதுப் பணியக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சிகிச்சை பெற வருவோர் மருந்துப் பொருட்களைப் பெற்றுக் கொள்வதற்கு பொருத்தமான பாட்டில்களை எடுத்து வருமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (8)

# சட்டவிரோத மணலுடன் சாரதிகள் கைது!

(அக்கரைப்பற்று)

அக்கரைப்பற்று அலிகம்பை வீதியில் சட்டவிரோதமான முறையில் மணல் ஏற்றி சென்ற இரண்டு டிப்பர் ரக வாகனங்கள் விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய, அப் பகுதியில் விசேட தேடுதல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, சட்டவிரோதமாக மணல் ஏற்றி வந்த இரண்டு டிப்பர் வாகனங்களையும் அதன் சாரதிகளையும் அதிரடிப்படையினர் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட சாரதிகளையும் கைப்பற்றப்பட்ட டிப்பர் வாகனங்களையும் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர். (8)

# வித்தியாபுரத்தில் மக்கள் குறைகேள் சந்திப்பு!



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான், வித்தியாபுரம் கிராம அலுவலர் பிரிவிற்குட்பட்ட பத்து வீட்டுத்திட்டம் கிராமத்தில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் மக்கள் குறைகேள் சந்திப்பொன்றை நட்த்தியுள்ளார்.

அப்பகுதி மக்களின் அழைப்பை ஏற்று குறித்த பகுதிக்கு நேரில் சென்ற பாராளுமன்ற உறுப்பினர், அப்பகுதி மக்களின் குறைபாடுகளைக் கேட்டறிந்ததுடன், மக்களின் குறைபாடுகளை நேரிலும் பார்வையிட்டார்.

அந்தவகையில் குறித்த பத்துவீட்டுத்திட்டம் கிராமத்தில் மின்சாரம் இன்மையால் தாம் பலத்த இடர்பாடுகளுக்கு முகங்கொடுத்துவருவதாகவும் காட்டு யானைகளால் பெரிதும் பாதிப்பை எதிர்கொள்வதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.

அத்தோடு குடிநீரைப் பெற்றுக் கொள்வதிலும் தாம் பாரிய இடர்பாடுகளுக்கு முகங்கொடுத்து வருவதாகவும் அதேவேளை அப்பகுதியிலுள்ள மாணவர்களுக்கான பிரத்தியேக வகுப்பு ஒழுங்குகளை மேற்கொள்ளுதல் தொடர்பிலும் மக்களால் கோரிக்கை விடுக்கப்பட்டதுடன், கடந்த காலத்தில் வழங்கப்பட்ட வீட்டுத் திட்டங்கள் முழுமைப்படுத் தப்படாமலுள்ளமை தொடர்பிலும் பாராளுமன்ற உறுப்பினரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது.

இதுதவிர அப்பகுதியில் அமைந்துள்ள முத்துமாரி அம்மன் ஆலயத்திற்கு சுற்றுவேலி அமைப்பது தொடர்பிலும் இதன் போது மக்களால் கோரிக்கையொன்றும் முன்வைக்கப்பட்டது.

இந்நிலையில் மக்களின் குறைபாடுகளையும், கோரிக்கைகளையும் கேட்டறிந்த ரவிகரன் எம்.பி எழுத்துமூலமான கோரிக்கைகளைத் தம்மிடம் கையளிக்குமாறு கேட்டுக் கொண்டார். அதற்கமைய மக்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள், குறைபாடுகள் தொடர்பில் தம்மால் கவனஞ் செலுத் தப்படுமெனத் தெரிவித்தார். (8)

# திறப்பு விழாவும் அடிக்கல் நாட்டலும்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியில் NSBS செயற்றிட்டத்தில் அமைக்கப்பட்ட புதிய கட்டடத்திறப்பு விழாவும் ஆரம்பப்பிரிவு புதிய கட்டடத்துக்கான அடிக்கல் நாட்டு விழாவும் இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி அதிபர் இ. புஸ்பரட்ணம் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண ஆளுநர் நா. வேதநாயகன், மற்றும் சிறப்பு விருந்தினராக பாராளுமன்ற உறு ப்பினர் மருத்துவர் ச. ஸ்ரீபவானந்தராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (8)

# செம்மலை நீராவியடிப்பிள்ளையார் பொங்கல் உற்சவம்





(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - பழைய செம்மலை, நீராவியடிப் பிள்ளையார் ஆலய 2026 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பொங்கல் விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை (02) பக்தி பூர்வமாக இடம்பெற்றது.

குறித்த நீராவியடிப் பிள்ளையார் ஆலய வருடாந்தப் பொங்கல்விழா பூசை வழிபாடுகளில் வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் பங்கேற்றார்.

மேலும் இந்த வருடாந்தப் பொங்கல் நிகழ்வில் பெருந்திரளான அடியவர்களும் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (8)

# 'பாத்திரங்கள்' நாடக ஆற்றுகை

(யாழ்ப்பாணம்)

இயக்குநர் ஆர்.லோகாநந்தனின் நெறியாள்கையில் "பாத்திரங்கள்" நாடக ஆற்றுகை நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 11.30 மணிக்கு யாழ்ப்பாணம் Timmer மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (8)

# முன்பள்ளி சிறார்களுக்கான தெய்வ தரிசனக் காட்சி விழா

(சண்டிலிப்பாய்)

சண்டிலிப்பாய் ஸ்ரீ சரஸ்வதி அம்பாள் உபதேச திருக்கோவில் ஏற்பாடு செய்துள்ள சங்கானை மற்றும் சண்டிலிப்பாய் கோட்ட முன்பள்ளி சிறார்களுக்கான ஆன்மீக விளையாட்டுப் போட்டியின் ஐந்தாம் நாள் நிகழ்வாக "தெய்வ தரிசனக்காட்சி விழா" (தெய்வங்களின் அருட்காட்சி) இன்று மாலை 05 மணிக்கு சண்டிலிப்பாய் ஸ்ரீ சரஸ்வதி அம்பாள் உபதேச திருக்கோவில் வளாகத்தில் இடம்பெறவுள்ளது.

செல்வி.வா. சிவாத்மிகா தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் கலைச் செல்வ விருந்தினராக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தின் இசையமைப்பாளர் கலைச்சுடர் பா. நாகேந்திரன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொள்ளும் தொழிலதிபர் சண். சுகந்தன் மற்றும் சங்கானை மாவடி இந்து இளைஞர் மன்ற உறுப்பினர்கள் ஆகியோருடன் கௌரவ விருந்தினர்களாக சி.பவன் (யாழ். போதனா வைத்தியசாலை), பு.நாகரஞ்சன் (இத்தாலி) ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

விழா மேலாளராக சுன்னாகம் இலங்கை மின்சார சபை மின் அத்தியட்சகர் சு. இரமணீதரனும் தெய்வீக சிறப்பாளராக சட்டத்தரணி பிரம்மஸ்ரீ பரம. சனாதன சர்மாவும் கலந்து கொள்கின்றனர்.

நிகழ்வில் திருவருள் உரை "சக்தி உபாசகர் " சிவஸ்ரீ . சோமாஸ்கந்தக்குருக்கள் (சீரணி அம்மன் கோவில்), உபதேச திருக்கோவில் உரை திருமதி. சி.பரிமளம் (சித்தன்கேணி ஸ்ரீ கணேச வித்தியாலய ஆசிரியர்) ஆகியோர் நிகழ்த்துகின்றனர்.

இந் நிகழ்வுக்கு வருகை தரும் அனைவரும் சைவத் தமிழர் பாரம்பரிய உடையணிதலை பின்பற்றுமாறு ஆலய குரு முதல்வர் தெரிவித்துள்ளார். (8)

# பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஆறுகால்மடம் புதிய சோனக தெரு J/88 கிராம அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் எதிர்வரும் 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆறுகால்மடம் அறிவொளி கலையரங்க முன்றலில் நடைபெறும் என செயலாளர் சி.க.தம்பிராசா அறிவித்துள்ளார். (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# முட்டை விலை மேலும் உயரலாம்

(கொழும்பு)

உற்பத்தி செலவு அதிகரிப்பால் எதிர்காலத்தில் ஒரு முட்டை விலை 50 ரூபாய் வரை உயரும் என சிறு மற்றும் நடுத்தர அளவிலான கோழிப்பண்ணை உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

கொழும்பு மாவட்டத்தின் சில பகுதிகளில் முட்டை ஒன்றின் சில்லறை விலை 47 முதல் 48 ரூபா வரை அதிகரித்துள்ளது.

சோள இறக்குமதிக்காக வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் இரத்துச்செய்யப் பட்டதன் காரணமாக கால்நடை தீவனத்துக்கான சோளம் வழங்குவதில் நெருக்கடி ஏற்பட்டுள்ளதாக இலங்கை கால்நடை உற்பத்தியாளர் சங்கத்தின் தலைவர் அஜித் எச்.குணசேகர தெரிவித்தார்.

கால்நடை தீவனத்தின் விலையும் சுமார் 10 சதவீதம் அதிகரித்துள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

இந்நாட்டின் நாளாந்த முட்டையின் தேவை சுமார் 95 இலட்சமாக இருந்த போதிலும், நாளாந்த முட்டை உற்பத்தி 70 இலட்சமாக குறைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தற்போது நிலவும் காலநிலைக்கு ஏற்ப முட்டை உற்பத்தி குறையும் என்றும் தலைவர் தெரிவித்துள்ளார்.(ஙி)

# சுற்றுலா பயணிகளின் வருகையில் சரிவு




(கொழும்பு)

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் அறிக்கை யின்படி, 2026 ஜூலை மாதத்தில் இலங்கைக்கு வரும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகையில் ஒரு சிறிய சரிவு பதிவாகியுள் ளது.

இந்த மாதத்தில் மொத்தம் 1 இலட்சத்து 96 ஆயிரத்து 845 சர்வதேச சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகை தந்துள்ளனர்.

இது, ஜூலை 2025 உடன் ஒப்பிடும் போது 1.7வீத சரிவைக் குறிக்கிறது.

சமீபத்திய புள்ளிவிவரங்களின் படி, ஜூலை மாதத்தில் 44 ஆயிரத்து 547 வருகைகளுடன் இந்தியா உள்ளது.இது மொத்த சுற்றுலாப் பயணிகளின் வருகையில் 26வீதம் ஆகும். (ஙி)

# வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம் ஆதனப் பெயர்மாற்றம்

## 177, 183/5, யாழ்ப்பாணம் வீதி, வட்டாரம் -13

வலிகாமம் மேற்கு பிரதேசசபை சுழிபுரம் உபஅலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 13 யாழ்ப்பாணம் வீதியிலுள்ள இல: 177, 183/5 ஆகிய ஆதனங்கள் எமது ஆதனவரிப்பதிவேட்டின் பிரகாரம் **K.S.**மார்க்கண்டு, சொந்தக்காரர் எனும் பெயர்களில் காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை உள்ளடக்கிய முழு ஆதனத்தில் சொரியல்ப்பங்கிற்கு திருச்சிற்றம்பலம் குமாரசுவாமி பெண் மங்கையர்க்கரசி ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு வே.நாகலிங்கம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 7461/ 12.02.1947ஆம் இலக்க உறுதியால் திருச்சிற்றம்பலம் குமாரசுவாமி ஆகியவரிடமிருந்து நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த திருச்சிற்றம்பலம் குமாரசாமி கைம்பெண் மங்கையற்கரசியும், மார்க்கண்டு அருணாசலமும் ஆகியவர்கள் குறித்த ஆதனத்தினை உள்ளடக்கிய முழு ஆதனத்தில் சொரியல்பங்குகளுக்கு சொந்தக்காரர்களாகவிருந்து, குறித்த ஆதனத்தினை சொரியலாக ஆட்சி செய்வது வசதியீனமாக இருந்த காரணத்தினால் பிரசித்த நொத்தாரிசு வே.நாகலிங்கம் முகதாவில் 8114/25.02.1951 ஆம் இலக்க பிரிவிடல் உறுதியொன்றினை இருவரும் இணங்கி நிறைவேற்றி, தத்தமது நிந்தமாக்கப்பட்ட பகுதிகளுக்கு முறையே சொந்தமும், உரித்துமுடையவராயிருந்தார்கள்.

குறித்த மார்க்கண்டு அருணாசலம் ஆகியவர் குறித்த தனது ஆதனம் தொடர்பில் மரணசாசனம் ஏதும் நிறைவேற்றாமலும், நிர்வகிக்கக்கூடிய பெறுமதிக்கும் குறைவான சொத்துக்களை விட்டும் காலஞ்செல்ல குறித்த ஆதனத்தில் அவரது பங்கானது அவரது மனைவியான மார்க்கண்டு அருணாசலம் கைம்பெண் அன்னம்மா ஆகியவரை தேடிய தேட்டமும், தாரப்பங்குமாகவும், மற்றும் அவரது வாரிசான மார்க்கண்டு சிவானந்தன் ஆகியவரை முதுசமாகவும் வந்தடைந்திருந்தது.

திருச்சிற்றம்பலம் குமாரசாமி மகள் தனபாக்கிய செல்வலட்சுமி ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு ஆ.குமாரசுவாமி முகதாவில் நிறைவேற்றப்பட்ட 4353/ 10.04.1989ஆம் இலக்க உறுதியால் குறித்த மார்க்கண்டு அருணாசலம் சிவானந்தனும், மார்க்கண்டு அருணாசலம் கைம்பெண் அன்னம்மாவும் ஆகியவர்களிடமிருந்து குறித்த ஆதனத்தினையும், பிறிதோர் ஆதனத்தினையும் உள்ளடக்கிய முழு ஆதனத்தினை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

வேலுப்பிள்ளை சிவராஜேஸ்வரன் கைம்பெண் சிவராஜேஸ்வரியும், தருமலிங்கம் சபாலிங்கம் பெண் சாந்தினியும் ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு ஆ.குமாரசுவாமி முகதாவில் நிறைவேற்றப்பட்ட 5580/ 03.06.1995 ஆம் இலக்க உறுதியால் குறித்த திருச்சிற்றம்பலம் குமாரசாமி மகள் தனபாக்கிய செல்வலட்சுமி ஆகியவரிடமிருந்து குறித்த முழு ஆதனத்தில் ஒரு பகுதியினை அவ்வுறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும், கட்டுப்பாடுகளுக்கு அமைவாக அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

செல்லத்துரை கணேசராசா ஆகியவருக்கு பிரசித்த நொத்தாரிசு வே.த.மு கதிர்காமநாதன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 8441/05.03.2007 ஆம் இலக்க உறுதியால் குறித்த வேலுப்பிள்ளை சிவராஜேஸ்வரன் கைம்பெண் சிவராஜேஸ்வரியும், தருமலிங்கம் சபாலிங்கம் பெண் சாந்தினியும் ஆகியவர்கள் குறித்த ஆதனத்தினை தவணை அறுதியாக கட்டுப்படுத்தியிருந்தார்கள்.

செல்லத்துரை கணேசராசா ஆகியவருக்கு பிரசித்த நொத்தாரிசு வே.த.மு கதிர்காமநாதன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 13633/ 03.01.2012 ஆம் இலக்க உறுதியால் குறித்த வேலுப்பிள்ளை சிவராஜேஸ்வரன் கைம்பெண் சிவராஜேஸ்வரியும், தருமலிங்கம் சபாலிங்கம் பெண் சாந்தினியும் ஆகியவர்கள் குறித்த ஆதனத்தின் ஆட்சியை ஒப்படைத்து ஆட்சி ஒப்பசாதனம் ஒன்றினை நிறைவேற்றியிருந்தார்கள்.

தாமோதரம்பிள்ளை சுரேஷ்குமார் ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு சோ.தேவராஜா முகதாவில் நிறைவேற்றப்பட்ட 8911/ 15.02.2020 ஆம் இலக்க உறுதியால் குறித்த செல்லத்துரை கணேசராசா ஆகியவரிடமிருந்து குறித்த ஆதனத்தினை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

சிவலிங்கம் கைம்பெண் தேவராணி ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு வீ.கௌதமன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 396/ 06.10.2017 ஆம் இலக்க உறுதியால் குறித்த, சிவலிங்கம் மகள் கவிதாவும், ஆனந்தசிவம் சிறிஆனந்தன் பெண் கீதாஞ்சனியும் ஆகியவர்களிடமிருந்து குறித்த முழு ஆதனத்தில் மற்றோர் பகுதியினை நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார். குறித்த உறுதியில் அடியுறுதிகள் எதுவும் குறிப்பிடப்படாது வெறுமனே, குறித்த ஆதனம் 1 ஆம், 3 ஆம் பேரின் தந்தையின் தந்தையான கணபதிப்பிள்ளை மார்க்கண்டு உரித்தாளராகவிருந்து அவர் காலமாகிச் செல்ல தமது தந்தையான மார்க்கண்டு சிவலிங்கத்தை வந்தடைந்து, அவரும் காலமாக தம்மை வந்தடைந்த பிதாவழி முதுசமும், ஆட்சியுமாகும் எனக் குறிப்பிடப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது.

தாமோதரம்பிள்ளை சுரேஷ்குமார் ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு வீ.கௌதமன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 2092/21.06.2022 ஆம் இலக்க உறுதியால் குறித்த சிவலிங்கம் கைம்பெண் தேவராணி ஆகியவரிடமிருந்து குறித்த ஆதனத்தினை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

தாமோதரம்பிள்ளை சுரேஷ்குமார் ஆகியவர், குறித்த ஆதனத்தினை உள்ளடக்கிய நில.பர.இலா 09 குளி 05.71 விஸ்தீரணமுடைய ஆதனத்திற்கு 2022.06.21 ஆம் திகதி பிரசித்த நொத்தாரிசு வீ.கௌதமன் முகதாவில் 2092 ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட அறுதி உறுதிப்படி உரித்தாளரானாரென்றும், குறித்த உறுதியின் ஆதன இடாப்பில் ஆதனத்தினது கிராம சேவையாளர் பிரிவானது J/178 என குறிப்பிட்டுள்ள போதும், குறித்த ஆதனமானது J/177 சித்தன்கேணி கிராமசேவையாளர் பிரிவிலேயே அமைந்துள்ளமையால் குறித்த ஆதனத்தின் அமைவிடம் தொடர்பாக ஏற்படும் பிணக்குகளைத் தவிர்ப்பதற்காக குறித்த ஆதனத்தின் கிராமசேவையாளர் பிரிவினை J/177 சித்தன்கேணி என திருத்த வேண்டிய அவசியம் தனக்கு எழுந்துள்ளதென்றும் பிரசித்த நொத்தாரிசு வி.கௌதமன் முகதாவில் 2092 ஆம் இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்திய உறுதியில் ஆதன இடாப்பின் பகுதியில் கிராமசேவையாளர் பிரிவு J/ 178 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது தவறானதெனவும் அது J/ 177 சித்தன்கேணி என் திருத்தப்பட வேண்டும் எனவும் வெளிப்படுத்தி பிரசித்த நொத்தாரிசு வீ.கௌதமன் முகதாவில் 2721/ 14.01.2024 ஆம் இலக்கத்தில் வெளிப்படுத்தல் உறுதியொன்றை நிறைவேற்றியிருந்தார்.

தாமோதரம்பிள்ளை சுரேஷ்குமார் ஆகியவர், மேற்படி ஆதனங்களை உள்ளடக்கிய முழு ஆதனத்தில் ஒரு பகுதிக்கு 2022.06.21 ஆம் திகதி பிரசித்த நொத்தாரிசு வீ.கௌதமன் முகதாவில் 2092 ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட அறுதி உறுதிப்படியும், 14.01.2024 ஆம் திகதி அதே நொத்தாரிசு முகதாவில் 2721 ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட வெளிப்படுத்தல் உறுதிப்படியும் தான் உரித்தாளரானார் என்றும், மற்றோர் பகுதிக்கு 15.02.2020 ஆம் திகதி பிரசித்த நொத்தாரிசு சோ.தேவராஜா முகதாவில் 8911 ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட அறுதி உறுதிப்படி தான் உரித்தாளரானார் என்றும், குறித்த இரு ஆதனங்களும் அருகருகே அமைந்துள்ளமையால் அவற்றினை ஒன்றுசேர்க்க வேண்டிய அவசியம் எழுந்துள்ளமையால், குறித்த இரு பகுதி ஆதனங்களையும் ஒன்றிணைத்து பிரசித்த நொத்தாரிசு வீ.கௌதமன் முகதாவில் 2730/08.02.2024 ஆம் இலக்கத்தில் வெளிப்படுத்தல் உறுதியொன்றை நிறைவேற்றியிருந்தார். அதன் பிரகாரம் மேற்படி ஆதனங்களை உள்ளடக்கிய பின்னாற் குறிப்பிடப்படும் முழு ஆதனத்திற்கு குறித்த தாமோதரம்பிள்ளை சுரேஷ்குமார் ஆகியவரே சொந்தமும் உரித்துமுடையவராயுள்ளார்.

குறித்த ஆதனத்தின் விபரம் வருமாறு:
பெயர்: **"சீகைப்புலமும் சல்லியவத்தையும் சீகைப்புலமும்"**
**இறை: சங்கானை மேற்கு**
விஸ்தீரணம்: நிலப்பரப்பு 14 குளி 0.54
எல்லைகள்: கிழக்கு- ஒழுங்கையும், கணபதி தம்புவின் ஆதனமும், கணபதி கிருஸ்ணணின் ஆதனமும் வடக்கு - கணபதி கிருஷ்ணனின் ஆதனமும், ஆறுமுகம் கைம்பெண் விசாலாட்சியின் ஆதனமும் மேற்கு- ஆறுமுகம் அருணாசலத்திற்கும், பங்காளர்களுக்குமுரிய ஆதனம், தெற்கு - கனகசபை தம்புவின் ஆதனமும், காரைநகர் சங்கானை வீதியும்

குறித்த தாமோதரம்பிள்ளை சுரேஷ்குமார் ஆகியவர் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது தாமோதரம்பிள்ளை சுரேஷ்குமார் ஆகியவருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(8306)

**தவிசாளர்/ செயலாளர், வலிகாமம் மேற்கு பிரதேசசபை.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

# பாரதம்

## சீனாவுக்கு படையெடுக்கும் அதிக சுற்றுலாப் பயணிகள்



(பீஜிங்)

தற்போது உலகெங்கிலும் உள்ள பல நாடுகளில் நிலவும் கடும் வெப்ப வானிலையால், பல வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் சீனாவிற்கு வருகை தர குவிகின்றனர்.

மேலும், இந்த நிலைமை 'சீனாவிற்குப் பயணம்' என்ற பெயரில் உலகளாவிய சமூக ஊடகங்களில் ஒரு புதிய போக்காக வேகமாகப் பிரபலமடைந்து வருவதாகவும் கூறப்படுகிறது.

உலகின் பல பகுதிகளில் அதிக வெப்பநிலை நிலவினாலும், சீனாவின் பல பகுதிகளில் நிலவும் மிதமான மற்றும் குளிர்ச்சியான வானிலையும், சீனாவின் குளிர்விக்கும் பொருட்களுக்கான அதிகரித்து வரும் உலகளாவிய தேவையும், இந்தக் கோடையில் சீனாவின் மீது அதிக கவனம் செலுத்தப்படக் காரணமாக அமைந்துள்ளன.

இந்த ஆண்டின் தொடக்கத்தில் இருந்து, சீனா உலகிலுள்ள பல நாடுகளின் பயணிகளுக்கு விசா இல்லாமல் தமது நாட்டுக்குள் வரும் வாய்ப்பை வழங்கி வருகிறது. (நி)

## ஈரானுக்கு இறு... விடுத்த அமெரி...

(வோஷிங்டன்)

ஈரானுடன் பேச்சுவார்த்தைகள் தொட... நடைபெற்று வருவதாகத் தெரிவித்து... அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்... நல்ல ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவத... ஈரானுக்கு இதுவே "கடைசி வாய்ப்பு" எ... எச்சரித்துள்ளதாக வெளிநாட்டு ஊடகா... செய்தி வெளியிட்டுள்ளன.

வெள்ளை மாளிகையில் ஊடகவியலாளர்களிடம் தனது கருத்துக்களை தெரிவிக்கும்போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

சவுதி அரேபியா, ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் கட்டார் ஆகிய வளைகுடா நாடுகளின் கோரிக்கைக்கு அமைவாகவும், ஈரானின் விருப்பத்திற்கு இணங்கவுமே தற்போது இந்தப் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

மேலும், இந்தப் பேச்சுவார்த்தைகள் ...

## தமிழக எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி கைது

(சென்னை)

தமிழகத்தின் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் சென்னையில் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாரால் அழைத்துச் செல்லப்படும்போது புன்னகைத்தபடியே காணப்பட்ட ஸ்டாலின், இந்தக் கைது நடவடிக்கையை ஒரு "வேடிக்கை" என்று குறிப்பிட்டதோடு, இதை "சட்டரீதியாக எதிர்கொள்வேன்" என்றும் தெரிவித்தார்.

காவிரி நதிநீர் விவகாரம் தொடர்பாகத் தமிழக முதல்வர் விஜயையும், நடிகை த்ரிஷாவையும் உதயநிதி ஸ்டாலின் கடுமையாக விமர்சித்துப் பேசினார்.

த்ரிஷாவுடனான விஜய்யின் நட்பைப் பாலியல் ரீதியான மறைமுகக் குறிப்பாக உணர்த்துவதாகப் பரவலாகக் கருதப்படும் அந்தப் பேச்சுக்கு, தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

அந்தக் கருத்தைத் தொடர்ந்து, ஸ்டாலின் மீது தமிழ்நாடு பொலிஸார் வழக்குப் பதிவு செய்ததன் பின்னணியில் இந்த கைது இடம்பெற்றுள்ளது.

இதனிடையே, உதயநிதி ஸ்டாலின் நீலாங்கரையில் உள்ள விஜயின் இல்லத்தின் முன்பு இன்று காலை திராவிட முன்னேற்ற கழகத்தின் சார்பாக போராட்ட அழைப்பொன்றினை விடுத்திருந்தார். இதன்போது ஏராளமானோர் கூடிய நிலையில் பொலிஸாரும் குவிக்கப்பட்டிருந்தனர்.

காவிரி விவகாரம் குறித்துக் கூடியிருந்தவர்களிடையே உரையாற்றிய உதயநிதி, தமிழகத்திற்கு காவிரி நீரைப் பெற்றுத் தருவதில் அரசு தோல்வியடைந்ததைக் குறிப்பிட்டு முதலமைச்சர் சி. ஜோசப் விஜயை விமர்சித்ததைத் தொடர்ந்து சர்ச்சை வெடித்தது.

அவர் உரையாற்றிக் கொண்டிருந்தபோது, கூட்டத்திலிருந்த ஒருவர் "த்ரிஷா, த்ரிஷா" என்று கூச்சலிட்டார்.

அதற்குச் சற்று இடைவெளிவிட்டு உதயநிதி இருபொருள் படும்படி பதிலளித்தார்.



அவரது இந்தக் கருத்துக்கள் ஆபாசமானவை என்றும் பெண்களை இழிவுபடுத்துபவை என்றும் கூறி அரசியல் எதிர்ப்பாளர்கள் பரவலான விமர்சனங்களை முன்வைத்தனர்.

இந்த சர்ச்சை பெரிதாகி வந்த நிலையில், ஆளும் கட்சியான தமிழக வெற்றிக் கழகம், திமுக தலைவரை கடுமையாகச் சாடியது.

அதேநேரம், தமிழக பாஜகவின் முன்னாள் தலைவர் கே. அண்ணாமலை அந்தப் பேச்சை விமர்சித்து கேலி செய்தார்.

அத்துடன், உதயநிதி, நடிகை த்ரிஷாவிடம் நிபந்தனையற்ற பகிரங்க மன்னிப்பு கேட்க வேண்டும் என்று பாஜக மாநிலத் துணைத் தலைவர் குஷ்பு சுந்தர் வலியுறுத்தினார்.


இருப்பினும், திமுக தனது தலைவருக்கு ஆதரவாகக் குரல் கொடுத்தது. காவிரி விவகாரம் மற்றும் டெல்டா பகுதி விவசாயிகளின் துயர நிலை ஆகியவற்றிலிருந்து கவனத்தைத் திசை திருப்பும் நோக்கில் அரசியல் உள்நோக்கத்துடன் உருவாக்கப்பட்ட சர்ச்சை இது என்று முன்னாள் அமைச்சர் டி. மனோ தங்கராஜ் குறிப்பிட்டார். (நி)

## இந்தியாவின் ... சாண்டிபுரா வை... 22 சிறுவர்கள் ...

(டில்லி)

இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் சாண்டிபுரா வைரஸ் பரவல் தீவிரமடைந்துள்ளதை அடுத்து, அம்மாநில சுகாதாரத் துறை உயர் எச்சரிக்கை நிலையில் வைக்கப்பட்டுள்ளது. இதுவரை 35 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதுடன், 22 சிறுவர்கள் உயிரிழந்துள்ளனர்.


15 வயதிற்குட்பட்ட சிறுவர்களிடையே மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களில் மொத்தம் 184



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# றுதி எச்சரிக்கை
# ரிக்க ஜனாதிபதி


**தாடர்ந்து ...ித்துள்ள ...ரம்ப், ஒரு ...டுவதற்கு ...பு" என்று ...டகங்கள்**



மூலம் உடன்பாடு எட்டப்படாவிட்டால், ஈரான் ஒரு நல்ல ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்கான கடைசி வாய்ப்பை இழக்க நேரிடும்.

ஈரானுடன் நேரடிப் பேச்சுவார்த்தைகள் எதுவும் நடைபெறவில்லை என ஈரான் வெளியுறவு அமைச்சு மறுப்புத் தெரிவித்துள்ள நிலையில், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் பேச்சுவார்த்தைகள் தொடர்வதாக உறுதியாகத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## ஜப்பானை உருக்குலைத்த நிலநடுக்கம்; தண்ணீர், மின்சாரம் இன்றி தவிக்கும் மக்கள்



(டோக்கியோ)

ஜப்பானில் நிலநடுக்கம் பாதித்த குமாமாட்டோ மாகாணத்தில் கடுமையான வெப்பம், தண்ணீர் பற்றாக்குறையால் மக்கள் தவித்து வருகின்றனர்.

ஜப்பானில் கடந்த சில நாட்களுக்கு முன்பாக சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டரில் 7.1 ஆக பதிவான இந்நிலநடுக்கம் பெரும் சேதத்தையும், உயிரிழப்பையும் ஏற்படுத்தியது. கிட்டத்தட்ட பலியானவர்களின் எண்ணிக்கை 38 ஆக அதிகரித்தது. பல ஆயிரக்கணக்கானோர் வீடுகளை இழந்து தவித்தனர்.

நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் எங்கு பார்த்தாலும் கட்டடக் குவியல்கள் காணப்பட, அவற்றை அதிகாரிகள் அகற்றும் பணியில் ஈடுபட்டு உள்ளனர். வீடுகளை இழந்த மக்கள் பாதுகாப்பாக நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டு உள்ளனர்.

இந் நிலையில் நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட குமாமாட்டோ மாகாண மக்கள் வாழ்வாதாரமின்றி தவித்து வருகின்றனர். அங்கு பெரும்பாலான மக்களின் வீடுகள் முற்றிலும் இடிந்துவிட்டன. மேலும் தண்ணீர் பற்றாக்குறையுடன் நெரிசலான தங்குமிடங்களில் வசித்து வருகின்றனர். 46000 வீடுகளில் இன்னமும் தண்ணீர் இல்லை. எரிபொருள் பற்றாக்குறையும் காணப்படுகிறது.


உசி மற்றும் ஹிகாவா மாகாணங்களில் நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்டு வீடுகளை இழந்தோர்கள் பாதுகாப்புடன் மீட்கப்பட்டு, நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டு உள்ளனர். மீட்பு பணிகள் துரித கதியில் நடைபெற்று வருவதாகவும், அனைத்தும் வெகு விரைவில் சீரமைக்கப்படும் என மீட்புக்குழு அதிகாரிகள் கூறியுள்ளனர். (நி)

## ...ின் குஜராத்தில் ...வைரஸ் தொற்று
### ...கள் உயிரிழப்பு

சந்தேகத்திற்குரிய தொற்றாளர்கள் பதிவாகியுள்ளனர்.

35 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதோடு, 11 பேரின் இரத்த மாதிரிப் பரிசோதனை முடிவுகள் இன்னும் வரவிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. சிகிச்சை பலனின்றி இதுவரை 22 சிறுவர்கள் உயிரிழந்துள்ளனர்.

7 நோயாளிகள் காந்திநகர், சபர்கந்தா-ஹிமத்நகர், படான், ராஜ்கோட் மற்றும் பவநகர் ஆகிய நகரங்களிலுள்ள வைத்தியசாலைகளில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அதே வேளை, 6 பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.




வைரஸைப் பரப்பும் மணல் ஈக்களை ஒழிக்கும் பொருட்டு, வீடுகளின் மண் சுவர்களில் உள்ள விரிசல்கள் மற்றும் பிளவுகளை அடைக்குமாறு பொது மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கால்நடைகள் வளர்க்கப்படும் பகுதிகளைச் சுற்றித் தீவிர பூச்சிக்கொல்லி மருந்துத் தெளிப்புப் பணிகள் களப்பணியாளர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பல உறுப்புகள் செயலிழப்பதைத் தடுக்கும் வகையில், அறிகுறிகளுடன் வரும் குழந்தைகளை உடனடியாக ஒக்சிஜன் மற்றும் வென்டிலேட்டர் வசதி கொண்ட தீவிர சிகிச்சைப் பிரிவுகளில் அனுமதிக்க அரசு மற்றும் தனியார் சிறுவர் வைத்தியசாலைகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. (நி)

## அவுஸ்திரேலியாவில் பறவைக்காய்ச்சல் மேலும் தீவிரமடைய வாய்ப்பு




(கன்பெரா)

அவுஸ்திரேலியாவில் H5N1 பறவைக் காய்ச்சல் மேலும் பரவுவதற்கு வாய்ப்புள்ளதாக அந்தநாட்டு அரசாங்கம் எச்சரித்துள்ளது.

அடிலெய்டு நகருக்குத் தெற்கே உள்ள கடற்கரைப் பகுதியில், உலங்கு வானூர்தி கண்காணிப்பின் போது 49 இறந்த மற்றும் 35 நோய்வாய்ப்பட்ட "கிரேட்டர் க்ரெஸ்டெட் டெர்ன்" கடல் பறவைகள் கண்டறியப்பட்டன.

பரிசோதனையில் அவற்றுக்கு H5N1 வைரஸ் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இது குறித்துப் பேசிய வேளாண் அமைச்சர் ஜூலி காலின்ஸ், வனவிலங்குகள் மத்தியில் இந்தத் தொற்று மேலும் பரவுவதையும், அதிக எண்ணிக்கையிலான விலங்குகள் பாதிக்கப்படுவதையும் இனி எதிர்பார்க்கலாம் என்று தெரிவித்துள்ளார்.

கடந்த ஜூன் மாதம் வைரஸ் முதன்முதலாகக் கண்டறியப்பட்டதிலிருந்தே பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

இதுவரை அவுஸ்திரேலியப் பண்ணைகளில் வைரஸ் பரவியதற்கான எந்த ஆதாரமும் இல்லை.

காட்டுப் பறவைகள் மற்றும் விலங்குகளின் இடப்பெயர்ச்சியைத் தடுக்க முடியாது என்பதால், இதுபோன்ற பெருமளவிலான உயிரிழப்புகள் மேலும் தொடரக் கூடும் என சுற்றுச்சூழல் அமைச்சர் முர்ரே வாட் தெரிவித்துள்ளார்.

H5N1 வைரஸ் பாதிப்பைப் பதிவுசெய்த கடைசி கண்டம் அவுஸ்திரேலியா ஆகும்.

உலகளவில் பல நூறு மில்லியன் பறவைகள் மற்றும் பாலூட்டிகள் இந்த வைரஸால் உயிரிழந்துள்ளன.

பாதிக்கப்பட்ட விலங்குகளுடன் தொடர்பில் இருக்கும் மனிதர்களுக்கு இந்தத் தொற்று பரவ வாய்ப்புள்ள போதிலும், உலகளவில் இதன் பாதிப்பு மிகக் குறைவாகவே உள்ளதால் மனிதர்களுக்கான ஆபத்து குறைவு என அதிகாரிகள் உறுதி அளித்துள்ளனர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரி/10 கிரிக்கெட் தொடர்

## 16 அணிகள் விலகல் (Knock out)முறைக்கு தகுதி

ரி-10 கிரிக்கெட் தொடரின் ஆரம்பத்தில் 21 கழகங்கள் பங்கு பற்றி இருந் தன. முதல் சுற்று ஆட்டங்கள் முடிவடைந்து 2 ஆம் சுற்றான விலகல் முறை ஆட்டத்துக்கு 16 அணிகள் தகுதி பெற்றுள்ளன.

விலகல் முறையில் போட்டியிட வுள்ள 16 அணிகளும் பின்வருமாறு யாழ். ஜொனியன்ஷ் எதிர் விக்ரோறியன்ஸ், டிறைற்ரோன், எதிர் ஓல் கோல்ஸ் கிறாஸ் கொப்பர்ஸ் எதிர் பற்றீசியன்ஸ், நியூஸ்ரார் எதிர் கே. சீ.சீ.சீ, AB எதிர் T.C.C ஹாட்லி யையிற்ஸ் எதிர் சென்றலைட்ஸ், வை. எம்.எச்.எ.எதிர் மூளாய் விக்டோறி ஜொலிஸ்ரார் எதிர் மானிப்பாய் பரிஸ் மேற்கூறப்பட்ட விலகல் முறையிலான போட்டிகள் முடிவுற்றதும் 8 அணிகள் கால் இறுதி போட்டிக்கு தகுதி பெறும். கால் இறுதிப் போட்டிகள் முடிவுற் றதும் 4 அணிகள் அரை இறுதிப் போட்டியில் விளையாடும். இதில் 2 அணிகள் தெரிவு செய்யப்பட்டு இறுதிப் போட்டியில் கலந்து கொள் வர். இறுதிப் போட்டியில் வெற்றி பெறும் அணிக்கு ரி/ 10 கிரிக்கெற் தொடர் வெற்றிக் கிண்ணம் வழங்கப்படும். (நி)

# மகோற்சவம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் அருள்மிகு மஞ்சவனப்பதி முருகன் ஆலய வருடாந்த திவ்விய மகோற்சவம் எதிர் வரும் 11 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாக வுள்ளது.

தொடர்ந்து உற்சவங்கள் நடைபெற்று எதிர்வரும் 26 ஆம் திகதி இரவு 07 மணிக்கு சப்பறத்திருவிழாவும் 27 ஆம் திகதி காலை 8 மணிக்கு தேர்த் திருவிழாவும் 28 ஆம் திகதி காலை 8 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் மாலை 6 மணிக்கு கொடியிறக்கமும் நடைபெறும் என ஆலய தர்மகத்தா சபையினர் அறிவித்துள்ளனர். (8)



மட்டக்களப்பு தேசிய கல்வியியற்கல்லூரியில் விரிவுரையாளராக கடமையாற்றி ஓய்வு பெற்ற சிரேஷ்ட விரிவுரையாளர் F.M.S.A அன்சார் மௌலானாவுக்கான பிரிவுபசார விழா அண்மையில் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

## யாழ் போதனா வைத்தியசாலையில் அமைந்துள்ள சிற்றுண்டிச்சாலையினை ஒப்பந்த அடிப்படையில் குத்தகைக்கு வழங்குதல் (ஜெய்க்கா சிற்றுண்டிச்சாலை)

யாழ் போதனா வைத்தியசாலையின் போதனா நலன்புரிச்சங்கத்தினால் தகுதியான/தகைமை வாய்ந்த சிற்றுண்டிச்சாலை நடாத்துபவர்களிடமிருந்து 01.09.2026 தொடக்கம் 31.08.2027 வரையான காலப்பகுதிக்கு யாழ் போதனா வைத்தியசாலையில் அமைந்துள்ள ஜெய்க்கா சிற்றுண்டிச்சாலை (அண்ணளவாக நீளம் 15' & அகலம் 10') நடாத்துவதற்கு கேள்விகள் கோரப்படுகின்றன.

நாட்டமுள்ள விலைக் கேள்விதாரர்கள் இவ் வைத்தியசாலையின் நலன்புரிக்கிளையில் கிடைக்கும் கேள்வி கோரும் ஆவணங்களை பெறுவதற்கான விண்ணப்பப் படிவத்தினை பூர்த்தி செய்து மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணமாக ரூபா 1000.00 காசாக நலன்புரிச்சங்க அலுவலகத்தில் செலுத்தி பெறுகைப்பத்திரங்களை அலுவலக நாட்களில் 05.08.2026 தொடக்கம் 12.08.2026 வரையான காலப்பகுதியில் 09.00 மணி தொடக்கம் 03.00 மணி வரையான நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விதாரர்கள் மீளளிக்கப்படக்கூடிய வைப்புக் கட்டணமாக (Bid Bond) ரூபா 25.000.00 ஐ அலுவலகத்தில் செலுத்தி அதனுடைய பற்றுச்சீட்டின் மூலப்பிரதியினையும் கேள்வி விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும்.

விண்ணப்பப் படிவம் பெற வரும் போது உணவகத்திற்குரிய வியாபார பெயர்ச்சான்றிதழின் (Bussiness Registration) பிரதியையும் குறித்த உள்ளூராட்சி சபையினால் வழங்கப்பட்ட வியாபார அனுமதிப்பத்திரத்தின் பிரதியையும் மற்றும் சுகாதாரப்பகுதியினால் வழங்கப்பட்ட "A" அல்லது "B" தரச் சான்றிதழின் பிரதியையோ அல்லது அதனை உறுதிப்படுத்தக்கூடிய ஏனைய சான்றிதழின் பிரதியையோ கட்டாயம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

விலைக்கேள்விகள் **12.08.2026**ஆம் திகதி **பி.ப 03.00** மணிக்கு முன்பாக நலன்புரிச்சங்க அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். சமர்ப்பிக்கப்பட்ட விலைக்கேள்விகள் கேள்வியாளர்கள் முன்னிலையில் அன்றைய தினமே பி.ப 03.00 மணிக்கு திறக்கப்படும்.

தகுதி வாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக் கேள்விதரார்கள் மேலதிக விபரங்களினையும் விலைக் கேள்விப்பத்திரங்களினையும் அலுவலக நேரங்களில் கீழ் காட்டப்பட்ட முகவரி/தொலைபேசி இலக்கத்துடன் 021 222 2261 (Exchange no 581) தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**யாழ் அரசினர் பொது வைத்தியசாலை நலன்புரிச்சங்கம்,**
**யாழ் போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.** (C-6170)

## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்

## மேற்பார்வையாளர்கள் தரம் III பதவிக்கு மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் ஆட்சேர்ப்பு மேற்கொள்வதற்கான விண்ணப்பம் கோரல் -2026

வடமாகாண கௌரவ ஆளுநர் அவர்களினால் 01.01.2013 ஆம் திகதி தொடக்கம் செயல்வலுப்பெறும் வகையில் 30.07.2013 ஆம் திகதி அனுமதிக்கப்பட்ட வடமாகாண உள்ளூராட்சி மன்றங்களுக்கான மேற்பார்வையாளர் சேவையின் சேவைப் பிரமாணக்குறிப்பு மற்றும் இச்சேவைப் பிரமாணக்குறிப்பின் பொருட்டு மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களுக்கு அமைவாகவும் வலிகாமம் கிழக்கு பிரதேச சபையில் காணப்படும் கீழ் குறிப்பிடப்படும் வெற்றிடங்களினை நிரப்புவதற்கு தேர்ச்சியற்ற பணியாளர் சேவை (PL -1-2025) வகுதியினுள் நிரந்தர பதவிகளில் கடமையாற்றுபவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| இல | பதவிப்பெயர் | தரம் | வெற்றிட எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01 | சந்தை மேற்பார்வையாளர் | III | 01 |
| 02 | சுகாதார மேற்பார்வையாளர் | III | 01 |
| 03 | வேலை/வெளிக்கள மேற்பார்வையாளர் | III | 01 |

**பொதுவான தகைமைகள்**

- விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
- திறமையான ஆளுமையும் உடற்தகுதியும் நன்னடத்தையையும் கொண்டிருத்தல் வேண்டும்.
- விண்ணப்பதாரி வலிகாமம் கிழக்கு பிரதேச சபை எல்லைக்குள் 05 ஆண்டுகள் தொடர்ச்சியான நிரந்தர வதிவிடத்தை உடையவராக இருத்தல் வேண்டும். வலிகாமம் கிழக்கு பிரதேச சபை எல்லைக்குள் நிரந்தர வதிவிடத்தைக் கொண்டவர்களிடமிருந்து போதியளவு விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறாத விடத்து யாழ்ப்பாண மாவட்டத்தினுள் 05 ஆண்டுகள் தொடர்ச்சியான வதிவிடத்தைக் கொண்டவர்களின் விண்ணப்பங்களும் பரிசீலிக்கப்படும். வதிவிட உறுதிப்படுத்தல் கிராம உத்தியோகத்தரினால் வழங்கப்பட்டு பிரதேச செயலாளரினால் மேலொப்பமிடப்பட்ட வதிவிடச் சான்றிதழ் அல்லது வாக்காளர் பிரித்தெடுப்பின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.
- வயது - உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

**சேவை நிபந்தனைகள்**

- இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும்.
- நியமனம் பெறுபவர்கள் ஒருவருட கால தகுதிகாண் நிலையில் அமர்த்தப்படுவார்கள்.

**கல்வி, தொழில்சார் தகைமைகள்**

- விண்ணப்பதாரி வலிகாமம் கிழக்கு பிரதேச சபையில் தேர்ச்சியற்ற பணியாளர் சேவை (Un skilled Employees service) வகுதியினுள் அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 10/2025 இற்கமைவாக PL- 1 -2025 சம்பள தொகுதியில் கடமையாற்றுபவராக இருத்தல் வேண்டும்.
- க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத வகையில் ஆகக் குறைந்தது இரண்டு பாடங்களில் திறமைச்சித்தியுடன் தமிழ்மொழி, கணிதம் ஆகிய இரண்டு பாடங்கள் உள்ளடங்கலாக 06 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
- விண்ணப்பதாரி வலிகாமம் கிழக்கு பிரதேச சபையில் நிரந்தர பதவி ஒன்றில் விண்ணப்ப முடிவுத் திகதிக்கு உடன் முன்னரான ஆகக்குறைந்தது 05 வருடகாலம் தொடர்ச்சியான திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்தவராகவும் குறித்த பதவியில் உறுதிப்படுத்தப்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

**தெரிவு செய்யப்படும் முறை**

- கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்குழுவினால் நேர்முகப்பரீட்சை நடாத்தப்பட்டு நேர்முகப் பரீட்சையில் பெற்ற மொத்தப் புள்ளிகளின் உயர் வரிசை ஒழுங்கில் நியமனத்திற்காக தெரிவு செய்யப்படுவர்.

**சம்பள அளவுத்திட்டம்**

- பொது நிர்வாகச் சுற்றறிக்கை 10/2025 இற்கமைவான சம்பளத்தொகுதி MN 1 - 2025 இற்கு ஏற்ப மேற்பார்வையாளர் பதவிக்கான திரட்டிய சம்பள அளவுத்திட்டம் 45,230-10x540-11x630-10x890 -10x1190-78,360/- ஆகும்.

**விண்ணப்ப முடிவுத் திகதி : 2026.08.18**

**விண்ணப்பிக்கும் முறை**

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் 2026.08.05 ஆம் திகதி முதல் உரிய விண்ணப்பப்படிவங்களைப் பெற்று பூரணப்படுத்தி தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவிகளினைக் குறிப்பிட்டு விண்ணப்ப முடிவுத் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு **செயலாளர், வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்** என்னும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலமாக அனுப்பிவைத்தல் வேண்டும்.

- ஆட்சேர்ப்புத் திட்ட விதிமுறைகளின்படி விண்ணப்பதாரி விண்ணப்பிப்பதற்கு தகைமையற்றவர் என நியமனத்திற்கு முன்னரோ, நியமனத்தின் போதோ அல்லது நியமனத்தின் பின்னரோ தெரியவரும் சந்தர்ப்பத்தில் அல்லது முன்வைக்கப்படும் தகவலொன்று பொய்யானது என தெரியவரும் சந்தர்ப்பத்தில் விண்ணப்பம் நிராகரிக்கப்படும் அல்லது நியமனம் இரத்துச்செய்யப்படும்.
- விண்ணப்ப முடிவுத் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும் பூரணமாக நிரப்பப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.
- ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளிற்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் ஒரே விண்ணப்பத்தில் தாம் விரும்பும் பதவிக்கான விருப்பத் தெரிவினை முன்னுரிமை அடிப்படையில் குறிப்பிடுதல் வேண்டும். குறித்த விருப்பத்தெரிவின் அடிப்படையிலேயே நியமனம் வழங்கப்படும் என்பதோடு பின்னர் தெரிவினை மாற்றுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாது.

**இ.பகீரதன், செயலாளர்,**
**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்.** **2026.08.05** (C-6169)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம் ஆதனப் பெயர் மாற்றம்

**ஆதன இலக்கம் 78/41, மூளாய் வீதி 2ம் ஒழுங்கை, வட்டாரம் 10**

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் வட்டுக்கோட்டை உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 10, மூளாய் வீதி 2ஆம் ஒழுங்கை, ஆதன இலக்கம் **78/41** என்ற ஆதனத்திற்கான ஆதன வரிப்பதிவேட்டில் கணபதி இராசன் என்ற பெயர் காணப்படுகின்றது. குறித்த ஆதனத்திற்கு பெயர்மாற்றத்திற்காக சின்னையா மகேஸ்வரன் பெண் ஜெயமலர் என்பவர் விண்ணப்பித்துள்ளார்.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனம் ஆரம்பத்தில் பிரசித்த நொத்தாரிசு நா.ஏகாம்பரம் முன்பாக 23.02.1972 திகதியில் 4490 ஆம் இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட அறுதி உறுதியால் கணபதி இராசனும் பெண் யோகேஸ்வரியும் சொந்தக் காரராகவிருந்து பிரசித்த நொத்தாரிசு த.மு.கதிர்காமநாதன் முகதாவில் 1982.09.08 திகதியில் 4450 ஆம் இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட அறுதி உறுதியால் காசிப்பிள்ளை முருகானந்தனுக்கும் பெண் பாக்கியத்துக்கும் அறுதியாக விற்றிருந்தனர். அதன் பின்னர் செல்வராசா இராசலிங்கமும் பெண் செல்வராணியும் தமது சகோதரர் காசிப்பிள்ளை முருகானந்தனும் பெண் பாக்கியமும் கொள்வனவு செய்யப்பட்ட காலப்பகுதியிலேயே அவர்கள் வெளிநாடு சென்றமையால் குறித்த ஆதனத்தினை தமக்கே ஒப்படைத்திருந்ததாகவும் அவ்வாறு ஒப்படைக்கும் போது தமக்கே உறுதி நிறைவேற்றி வழங்குவதாக வாக்குறுதியளித்திருந்ததாகவும் அது பின்னைய நாட்களில் அவர்கள் வெளிநாட்டிலிருந்தமையாலும் முருகானந்தன் வெளிநாட்டிலேயே இறந்ததன் காரணமாக சாத்தியமற்று போய்விட்டதாகவும் தற்போது தமது ஆட்சியிலேயே இருப்பதாகவும் பிரசித்த நொத்தாரிசு த.மு.கதிர்காமநாதன் முகதாவில் 09.01.2008 திகதியில் 9184 ஆம் இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட வெளிப்படுத்தல் உறுதியால் வெளிப்படுத்தியிருந்தனர்.

அதன் பின்னர் குறித்த ஆதனத்தினை பிரசித்த நொத்தாரிசு த.மு.கதிர்காமநாதன் முகதாவில் 2008.02.04 திகதியில் 9255 ஆம் இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட அறுதி உறுதியால் சின்னையா மகேஸ்வரனுக்கும் பெண் ஜெயமலருக்கும் அறுதியாக விற்றிருந்தனர். எனினும் காசிப்பிள்ளை முருகானந்தன் மற்றும் பாக்கியம் தொடர்பில் தற்போதைய சொந்தக்காரருக்கு எத் தகவலையும் பெற முடியாதிருப்பதனால் இப் பத்திரிகை பிரசுரத்தினை மேற்கொள்ள வேண்டிய அவசியம் தற்போதைய சொந்தக்காரருக்கு எழுந்துள்ளது.

இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் C.விஸ்வநாதன் அவர்களால் 2026.03.02 திகதியில் அளக்கப்பட்டு 2026.03.03 திகதியில் 2882 ஆம் இலக்கத்தில் தயாரிக்கப்பட்ட படத்தில் துண்டு 1 எனச் சுட்டப்பட்டுள்ளது.
குறித்த ஆதனத்தின் விபரம் வருமாறு:

ஆதனப்பெயர் : **சாத்தியவத்தை**
இறை : வட்டுக்கோட்டை மேற்கு இறை
விஸ்தீரணம் :நிலப்பரப்பு 3 குளி 15.1/2 அளவின்படி நிலப்பரப்பு 3 குளி 15.14

எல்லைகள் **கிழக்கு:** கணபதி சின்னராசாவினாதனமும், பாதையும், **வடக்கு:** ஒழுங்கை, **மேற்கு:** ஒழுங்கை, **தெற்கு:** பாதையும், நாகமுத்து இராசையாவினதும் பெண் சறோஜாதேவியினதும் ஆதனம்

இவ் ஆதனப் பெயர்மாற்றம் தொடர்பாக யாராவது ஆட்சேபனை இருப்பின் உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது சின்னையா மகேஸ்வரன் பெண் ஜெயமலர் என்பவருக்கு பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர்மாற்றத்தால் வரக்கூடிய எந்த பொறுப்பிற்கும் வலிமேற்கு பிரதேச சபை பொறுப்பாளியல்ல என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றேன்

**தவிசாளர் / செயலாளர், வலிகாமம் மேற்கு பிரதேசசபை.** (8303)

# சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார சந்தை விலைகள்

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி | மட்டுவில் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 300 | 250 | 400 | 250 | 250 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | -- | 200 | -- | 350 |
| பச்சைமிளகாய் | 1100 | 1400 | 900 | 800 | 1200 | 800 |
| தக்காளி | 400 | 400 | 450 | 300 | 300 | 320 |
| மரவள்ளிக்கிழங்கு | 280 | 250 | 180 | 200 | 250 | 140 |
| கோவா | 300 | 250 | 200 | 300 | 220 | 230 |
| கரட் | 400 | 400 | 350 | 400 | 400 | 370 |
| பூசணி | 200 | 160 | 180 | 200 | 150 | 130 |
| புடோல் | 200 | 200 | 150 | 200 | 160 | 100 |
| வாழைக்காய் | 120 | 150 | 120 | 160 | 120 | 120 |
| சின்ன வெங்காயம் | 250 | 250 | 350 | 350 | -- | 280 |
| பெரிய வெங்காயம் | 240 | 240 | -- | 200 | 200 | -- |
| பாகற்காய் | 500 | 400 | 400 | 300 | 400 | 300 |
| வெண்டக்காய் | 200 | 200 | 180 | 200 | 200 | 120 |
| கருணைக் கிழங்கு | 400 | 300 | 350 | 400 | -- | 400 |
| பயிற்றங்காய் | 150 | 250 | 150 | 200 | 200 | 130 |
| லீக்ஸ் | 300 | 400 | 300 | 300 | 400 | 280 |
| பீற்றூட் | 450 | 500 | 350 | 350 | 350 | 350 |
| கறிமிளகாய் | 650 | 800 | 500 | 700 | 600 | 500 |
| முருங்கைக்காய் | 250 | 300 | 120 | 250 | 200 | 250 |
| போஞ்சி | 500 | 600 | 400 | 500 | 500 | 500 |
| தம்புள்ள-கத்தரி | 150 | 300 | -- | 280 | -- | -- |
| கீரை - 1 பிடி | 80 | 150 | 60 | 80 | -- | 60 |
| தேசிக்காய் | 200 | 200 | 250 | 400 | 300 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 140 | 150 | 140 | 100-150 | -- | 110 |
| இராசவள்ளி | 450 | 300 | 350 | 300 | -- | 300 |
| வெங்காயப்பூ | 200 | 400 | -- | 400 | -- | -- |
| முள்ளங்கி | 160 | 200 | 180 | 200 | 160 | 150 |
| பொன்னாங்காணி | 100 | 150 | -- | 60 | -- | 50 |
| வல்லாரை | 70 | 100 | -- | 100 | -- | 50 |
| ஈரப்பலா | 200 | 100 | -- | 150 | -- | 75 |

# திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மயிலணி சைவ மகா வித்தியாலய டிஜிற்றல் கல்வி மையத் திறப்பு விழா நாளை வியாழக்கிழமை காலை 8 மணிக்கு வித்தியாலய அதிபர் பால சுப்பிரமணியம் பார்த்தீபன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆனந்த ஜெயேந்திரன் சஞ்சீவன் மற்றும் சிறப்பு விருந்தினராக உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சோமசுந்தரம் இராம நாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (8)

# இராசிபலன்

05.08.2026
ஆடி 20, புதன் கிழமை
சப்தமி முன்னிரவு 6.11 மணிவரை

அச்சுவினி முன்னிரவு 7.39 மணி வரை
சுப நேரம் 4.34-6.04 மணி வரை
இராகு காலம் 12.04 - 1.34 மணி வரை

சந்திராஷ்டமம்
அத்தம், சித்திரை.

**வளவன்**

**மேஷம்** கனவு பலிதமுண்டு, எதிர்பார்க்காமல் செய்த வேலையொன்றில் கணிசமான ஆதாயம் கிடைக்கலாம், பணியில் சிறுமன உளைச்சல் ஏற்படலாம், கற்பனை மிகுதியான நாள்.

**கடகம்** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தொட்காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**துலாம்** குடும்பத்தினரிடையே அன்னியோன்னியம் அதிகரிக்கும் பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், காரிய அனுகூல முண்டு, கௌரவம் அந்தஸ்து உயரும் நாள்.

**மகரம்** பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், அதிஷ்ட வாய்ப்புக்கள் உங்களைத் தேடி வரலாம், பிறர் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**ரிஷபம்** தொழில் ரீதியான பயணங்கள் இடம் பெறலாம், சேமிப்பில் சிறிது கரையலாம், விருப்பங்கள் நிறைவேற இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், உடல் நலனில் கவனம் தேவை.

**சிம்மம்** தொழிலில் எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், உடல் நலன் சீராகும், வீட்டைச் சீரமைப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், ஆன்றோர்களின் சந்திப்புகள் இடம் பெறலாம்.

**விருச்சிகம்** திட்டமிட்ட காரியங்கள் எளிதில் கைகூடும், சுவாரஸ்யம் தரும் சம்வங்கள் இடம் பெறலாம், கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், பொது வாழ்வில் புகழ் கூடும்.

**கும்பம்** பாகப்பிரிவினைகள் சுமுகமாக அமையும், வழிபாடு பெருமை தரும், நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், குடும்ப பொறுப்புக்ள் கூடும்.

**மிதுனம்** எண்ணிய காரியங்கள் உடனுக்குடன் நிறைவேறும் வாய்ப்புண்டு, இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கன்னி** குடும்பத்தினரிடையே சிறு சிறுகருத்து முரண்பாடுகள் தோன்றி மறையும், பயணங்களின் போது பொருட்களில் கவனம் தேவை, வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள்.

**தனுசு** நெடு நாளைய கனவுகள் நனவாகலாம், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், புதிய சொத்துக்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**மீனம்** எதிர்பாராத தன வரவுகள் வந்து சேரலாம், தொழிலை பிரிவு படுத்தும் எண்ணம் உருவாகும், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள்.

**எழுதப்படிக்கத் தெரிந்தவனுக்கு நான்கு கண்கள்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கல்கியின் பாகம் - 5



# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 1105



"இது என்ன? யுத்தம் ஒன்றும் நடக்கவில்லையே? பகைவர்களின் சைன்யங்கள் படை எடுத்து வருவதாகத் தெரியவில்லையே? அப்படிப் படையெடுத்து வருவதற்கு ஆற்றல் வாய்ந்த பகைவர்கள் வடக்கே, தெற்கே, மேற்கே, கிழக்கே, எங்கும் சமீபப் பிரதேசத்தில் இல்லையே?

அப்படி ஒருவேளை வடக்கே இரட்டை மண்டலத்திலிருந்து பகைவர்கள் திடீர்ப் பாய்ச்சலில் வந்து விடுவதாக இருந்தாலும் கொள்ளிடத்தையும் காவேரியையும் மற்றுமுள்ள நதிகளையும் தாண்டி இப்போது எப்படி வர முடியும்? அந்த மாநதிகளில் வெள்ளம் பூரணப் பிரவாகமாக அல்லவா போய்க் கொண்டிருக்கிறது?

இவ்விதமெல்லாம் தஞ்சைக் கோட்டையின் புற நகரத்தில் வசித்த ஜனங்கள் பேசிக்கொண்டார்கள். ஒருவேளை பொன்னியின் செல்வரைக் கோட்டைக்குள் பிரவேசியாமல் தடுப்பதற்காகவே இந்த ஏற்பாடுகள் எல்லாம் செய்யப்படுகின்றனவோ என்று சிலர் கேள்விகளைப் போட்டுக் கொண்டு, "அப்படித்தான் இருக்கவேண்டும்" என்று மறுமொழி கூறிக்கொண்டார்கள்.

இந்த வதந்தி பரவப் பரவ, நகரமாந்தரின் உத்வேகம் அதிகமாயிற்று. "விஜயாலய சோழரின் வம்சத்தில் வழி வழியாக வந்த இளவரசரைக் கோட்டைக்குள்ளே வராமல் தடுப்பதற்கு இந்தப் பழுவேட்டரையர்கள் யார்? அப்படிப் பழுவேட்டரையர்கள் உண்மையில் முயல்வதாயிருந்தால் கோட்டை மதில்களையே இடித்துத் தகர்த்து விட வேண்டியது தான்!" என்ற தோரணையில் பேசுவோரும் இருந்தனர்.

வதந்தி என்றும் மாயா பூதம் எப்படிக்கிளம்புகின்றது, எப்படி அவ்வளவு விரைவில் பிரயாணம் செய்கின்றது என்பது யாராலும் கண்டுபிடிக்க முடியாத மர்மமான காரியம்தான். திடீரென்று இன்னொரு பயங்கரமான வதந்தி மக்களிடையே பரவத் தொடங்கியது.

வெகு காலமாக எதிர்பார்க்கப்பட்டு வந்த சுந்தர சோழ சக்கரவர்த்தியின் மரணம் நேர்ந்துவிட்டது என்பது தான் அவ்வதந்தி. "சக்கரவர்த்தி காலமாகி விட்டாராமே? அது உண்மையா?" என்று முதலில் கேட்டார்கள். அன்று அதிகாலையில் வால் நட்சத்திரம் ஒரு நிமிடம் ஜோதி மயமாக ஒளி வீசிவிட்டுப் பூமியை நோக்கி விழுந்து மறைந்ததைப் பார்த்தவர்கள் சிலர், அதையே அத்தாட்சியாகக் கொண்டு சுந்தர சோழர் காலமானதை ஊர்ஜிதம் செய்தார்கள்.

"இது உண்மையாயின், மேலே என்ன நடக்கப் போகிறது?" என்பது பற்றிக் கவலையுடன் விவாதிக்கப் பட்டதும் இயல்பேயல்லவா? இராஜ்ய உரிமை சம்பந்தமாகத் தகராறுகள் ஏற்படுமா? சிற்றரசுகள் இரு கட்சியாகப் பிரிந்து நின்று சண்டையிடுவார்களா?

இத்தகைய உள்நாட்டுச் சச்சரவுகள் காரணமாகச் சோழ சாம்ராஜ்யமே சின்னாபின்னமாகி விடுமா? நூறு ஆண்டுகளாகத் தழைத்து ஓங்கி வளர்ந்து வந்த சாம்ராஜ்யத்தில் மீண்டும் பகைவர்களின் படைகள் உட்புகுமா?

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

யோசப் பாலாவின்...

## சும்மா இருப்பது சுகமானதா



சும்மா இருக்கிறது அவ்வளவு சுகமாக இருக்குதா செல்வராசா என சந்தையால் வந்த முருகு குரல் கொடுத்தார்.

இப்படித்தான் எல்லோரும் நினைக்கிறார்கள். சும்மா இருப்பது என்றால் எவ்வளவு கஷ்டம் என்பதை சும்மா இருந்து பார்த்தால் தான் தெரியும் முருகண்ணே.

சும்மா இருப்போம் என்று குந்தில இருந்தால் இந்த நுளம்பு விடுவதில்லை. ஒரே இடத்தில் இருந்தால் எழும்ப முடியவில்லை. அதை விட எறும்புத் தொல்லை, பூச்சித் தொல்லை, சிலந்தி கூட என்னில் தொட்டு கூடுகட்டப் பார்க்கின்றது.

அது போக பசி வந்தால், தண்ணிவிடாய் வந்தால் எழும்பி அங்கும் இங்கும் அலையவேண்டி இருக்கின்றது. இது தெரியுமா யாருக்கும்? சும்மா சொல்லிப் போடுவார்கள். அவன் செல்வராசா சும்மா இருக்கின்றான் என்று மட்டும்.

இப்ப வாற போறவர்கள் கூட ஒருக்கா தலையைத் திருப்பி சொல்லி விட்டுப் போறார்கள். சும்மா இருந்தா இந்த கோழி, ஆடு,மாடு மேய விடுவேன், பார்த்துக் கொள்ளுங்கள் என்று, தபால்க்காரன், மரக்கறிக்காரன், வந்தால் ஒருக்கா சொல்லும் என்று, எனக்கு வேலை சொல்வார்கள் பாரு எனக்கு விசர் விசராக இருக்கு இவைகளுக்கு சும்மா இருக்கிற நான்தான் கிடைத்தேனோ. என்னை வைத்து கேலியும் கிண் டலும் பண்ணப் பார்க்கிறார்கள்.

ஆற்றயும் கதை ஏன் இந்த நேரத்தில் ஏதும் முயற்சி செய்தால் இந்த பேச்சுக்களுக்கு இடம் இராது தானே என்ற முருகுக்கு.

எதைச் செய்கிறது? ஏன் செய்ய வேண்டும்? இருக்கும் வரை சும்மா இருந்து விட்டு போவம் என்றால் யாரும் விட மாட்டார்கள் பார்.

அட தம்பி செல்வராசா உன் பேருக்கு நீ ஒரு ராசா, செல்வ ராசா நீ ஏன் ஆற்றயும் கையப் பாரத்து இருக்க வேண்டும் சொல்லு. பேருக்கு செல்வராசாவா இருந்தென்ன ஊருக்கு தண்ட ராசாவா நீ.

உன்னை சுத்தி திரிகின்ற ஏறும்பப்பார், நுளம்பப் பார் தங்கட சுறுசுறுப்பான முயற்சியால் தான் தங்கட தேவைகளை ஓடி ஓடி செய்து முடிக்கிறது பார்த்தியா என முருகர் முறுக் கேத்தினார்.

இங்க என்னத்தை செய்கிறது அண்ணா யாரு உதவுவினம் என்னத்தை தருவார்கள் என்ற ஏக்கம் தான் செல்வராசாவுக்கு செலவிருக்கு என்று ஏதாச்சும் தருகினமா சொல் அண்ணா.

அட யாரையும் எதிர்பாத்து உன்னுடைய காலத்தை கரைக்காமல் உன்னுடைய முற்றத்தில் நான்கு முருங்கை தடியாவது நட்டு வள, வாழையை நட்டுப்பார். வீட்டுத் தோட்டத்தை வைத்துப் பார். குப்பைகளை பசளையாக்கிப்பார்.

உன்னை திரும்பிப் பார்க்கும் உன்னுடைய ஊர், உனக்கு என்ன குறை, உன் உடம்பு தெம்பா இல்லையா? செல்வத்தின் ராசாவா வீதியில் நான்கு பேர் மதிக்கவும் நமக்கு நாமே சுயமரியாதையோடு வாழ்ந்து காட்டு என்ற முருகுவின் சொல்லு செல்வராசாவின் சிந்தனையில் மன மாற்றம் அதன் முற்றத்தில் மண்வெட்டும் சத்தம் விடையாய் மாறியது. அன்றைய விடியல் செல்வரா சாவின் செயலே நம்பிக்கையாக துளிர்விட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

நாம் வரையறுக்கப்பட்ட ஏமாற்றத்தை ஏற்க வேண்டும். ஆனால் எல்லையற்ற நம்பிக்கையை இழக்காதீர்கள். – மார்டின் லூதர் கிங்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அனைத்தையும் எதிர்க்கும் தரப்புகள் இருக்கும் வரை...

நம் தமிழினத்தின் தலைவிதியை நினைக்கும் கால் கட்டாந்தரையில் நின்று கதறி அழ வேண்டும் போல இருக்கும்.

அந்தளவிற்கு எங்கள் நிலைமை படுமோசமாகி வருகிறது.

ஆம், யாழ்ப்பாணத்தில் விளையாட்டுத் துறையை அபிவிருத்தி செய்வதற்கு தமிழ் அரசியல்வாதிகள் சிலர் முட்டுக்கட்டையாக இருக்கின்றனர் என விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் சுனில் குமார கமகே குற்றம் சாட்டியுள்ளார்.

அவர் முன்வைத்த குற்றச்சாட்டில் நியாயமுண்டென்பதை தமிழர்களாகிய நாம் மறுதலிக்க முடியாதவர்களாக உள்ளோம்.

இங்கு அமைச்சர் கூறியது போல தனித்து விளையாட்டுத்துறையை மட்டும் நம்மவர்கள் தடை செய்யவில்லை.

மாறாக, எங்கள் தமிழர் தாயகத்தில் எத்தகைய அபிவிருத்தித் திட்டங்கள் வந்தாலும் அதனைத் தடுத்து நிறுத்துவதற்கென்றே நம்மத்தியில் ஒரு குழுமம் இயங்கிக் கொண்டிருக்கிறது.

ஆம், முன்னாள் அமைச்சர் சுவாமிநாதன் கொண்டுவந்த பொருத்து வீட்டுத் திட்டத்தை எதிர்த்தோம். மன்னாரில் காற்றாலைத் திட்டத்தைத் தடுக்கத் தீவிரம் காட்டினோம். மண்டைதீவில் சர்வதேச கிரிக்கெற் மைதானம் அமைவதை ஒருவாறு தடுத்து நிறுத்தி மகிழ்வு கண்டோம்.

இதேபோல எங்கள் பகுதியில் எந்த அபிவிருத்தித் திட்டத்தைக் கொண்டு வந்தாலும் அதனைத் தடுத்து நிறுத்துவதில் நம்மவர் சிலருக்கு அலாதிப் பிரியம்.

இதில் வேடிக்கையும் வினோதமும் என்னவென்றால், அத்தகையவர்கள் தங்களை தமிழ் மக்களின் அரசியல் காவலர்களாக – இயற்கையின் பராமரிப்பாளர்களாக – சிவில் சமூகத்தின் பிரதிநிதிகளாகக் காட்டிக் கொள்வதுதான்.

என்ன செய்ய முடியும். இங்குதான் தலைவிதியை நோக வேண்டியுள்ளது.

ஆம், எந்த வகையிலும் தமிழ் மக்கள் விமோசனம் பெறமுடியாத அளவில் நம்மில் ஒரு தரப்பு ஏதோவொரு பிரச்சினையைக் கிழப்பி, அதனூடு எங்களுக்கான விடியலைத் தடுத்து இருளுக்குள் எங்கள் தமிழ்ச் சமூகத்தைத் தள்ளி விழுத்தி விடுகின்றது.

இப்போது கூட; தமிழ் பேசும் அரசியல் கட்சிகளின் கூட்டணி ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது.

குறித்த கூட்டணி சார்ந்தவர்களின் பிரதான நோக்கம் மாகாண சபைத் தேர்தலை வலியுறுத்துவது தான்.

பரவாயில்லை. மாகாண சபைத் தேர்தலை நடத்தினால், அதனூடு சில அதிகாரங்கள் சிறுபான்மை மக்களுக்குக் கிடைக்கப்பெறும் என்பது உண்மை.

ஆனால், ஏலவே எங்கள் கையில் மாகாண சபை ஆட்சி கிடைத்தபோது அதை நாம் எப்படி நடத்தினோம். அன்றைய வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் மூலைக்கு மூலை குந்தியிருந்து எழுதிய கடிதங்கள், கொண்டுவந்த தீர்மானங்கள் எதற்கானவை என்பதை ஒருகணம் மீட்டுப் பார்த்தால், மாகாணசபைத் தேர்தல் நடைபெறாமல் இருப்பதே மேல் என்று எண்ணத்தோன்றும்.

ஆக, மாகாண சபைத் தேர்தல் நடைபெற்றால், சிலருக்குப் பதவி கிடைக்கும் என்பதைத் தவிர அதனை நாம் சீராக நடத்தப் போவதில்லை என்பது நிறுதிட்டமான உண்மை.

# 2027 வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகள் ஜனாதிபதி தலைமையில் ஆராய்வு!

(கொழும்பு)

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சுக்கு 2026 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடுகளின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்களின் முன்னேற்ற மீளாய்வு மற்றும் 2027 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகள் குறித்த கலந்துரையாடல் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையில் நேற்று (04) பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சின் கீழ் உள்ள பிரதான திணைக்களங்கள், அரச சபைகள் மற்றும் நிறுவனங்களால் 2026 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடுகளின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டங்களின் பௌதிக மற்றும் நிதியியல் முன்னேற்றம் குறித்தும், எதிர்காலத் திட்டங்கள் மற்றும் 2027 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகள் குறித்தும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

நீதித்துறை உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டதுடன், பொதுமக்களுக்கு விரைவாக நீதி வழங்கும் நீதிமன்றக் கட்டமைப்பை ஸ்தாபிப்பதே நோக்கமாகும் என்றும், அதற்காக நீதித்துறையின் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தியை விரைவுபடுத்த வேண்டும் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

அதன்படி கொழும்பு மேல் நீதிமன்ற வளாகம், நீதி அமைச்சுக் கட்டிடம், புதுக்கடை நீதிமன்ற வளாகம், காலி, மாத்தளை, கந்தளாய் உட்பட புதிய நீதிமன்ற வளாகங்களின் நிர்மாணப் பணிகள் குறித்த முன்னேற்றம் தொடர்பிலும் இங்கு கலந்துரையாடப்பட்டன.

மேலும் 2022 ஆம் ஆண்டு பொருளாதார நெருக்கடியின் காரணமாக இடையில் நிறுத்தப்பட்ட நீதிபதிகளுக்கான உத்தியோகபூர்வ வாசஸ்தலங்கள் நிர்மாணிக்கும் திட்டம் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

சட்டமா அதிபர் திணைக்களத்தின் கீழ் 79 மில்லியன் மூலதனச் செலவுகளின் ஊடாக மேற்கொள்ளப்படும் திட்டங்களின் முன்னேற்றம், சட்டவரைஞர் திணைக்களத்தின் கீழ் 38 மில்லியன் செலவில் மேற்கொள்ளப்படும் திட்டங்களின் முன்னேற்றமும் இங்கு ஆராயப்பட்டன.

தற்போது முக்கிய பங்கு வகிக்கும் சட்ட வரைஞர் திணைக்களத்திற்குத் தேவையான மனித வள அபிவிருத்தி மற்றும் தொழில்நுட்ப வசதிகளை மேம்படுத்துவதன் ஊடாக அதன் செயற்திறனை அதிகரிப்பது குறித்து இங்கு விசேட கவனம் செலுத்தப்பட்டது.

மேலும் அரசாங்க பகுப்பாய்வாளர் திணைக்களத்தின் நடவடிக்கைகள் குறித்தும் விசேட கவனம் செலுத்தப்பட்டதுடன், அதன்படி 635 மில்லியன் நிதி ஒதுக்கீட்டின் கீழ் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருவதுடன், அது 701 மில்லியன் வரை அதிகரிக்கக் கூடும் எனவும் அதிகாரிகள் இதன்போது சுட்டிக்காட்டினர். (ம-7)

## மூலிகை மருத்துவக் கண்காட்சியும் மருத்துவப் பரிசோதனையும்

வலிகாமம் மேற்குப் பிரதேச செயலக ஆயுள்வேத பாதுகாப்புச் சபையினால் நடத்தப்படும் மூலிகை மருத்துவக் கண்காட்சியும் மருத்துவப் பரிசோதனை முகாமும் ஆயுள்வேதப் பாதுகாப்புச் சபைத் தலைவர் வெற்றிவேல் சக்திவேல் தலைமையில் நாளை வியாழக்கிழமை (06) காலை 9.00 மணிமுதல் தொல்புரம் சிவபூமி முதியோர் இல்லத்தில் நடைபெறும்.

இந் நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவபீடப் பீடாதிபதி கலாநிதி.விவியன் சத்தியசீலன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். சித்த மருத்துவ பீட விரிவுரையாளர்கள், மாணவர்களால் அமைக்கப்படும் காட்சிக் கூடங்கள் காட்சிப்படுத்தப்படும். (ம-7)

## நல்லூர் கந்தன் ஆலய வளைவு திறப்பை முன்னிட்டு வீதித்தடை

நல்லூர் கந்தசுவாமி ஆலய வடக்கு வாசல் வளைவு காண்பிய விரிப்பு நிகழ்வு நாளை 06.08.2026 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ளதால் நிர்மாண நிறைவுப் பணிகளுக்காகவும் திறப்பு விழா நிகழ்வுக்காகவும் இன்று 05.08.2026 ஆம் திகதி புதன்கிழமை அதிகாலை முதல் 06.08.2026 ஆம் திகதி வியாழக்கிழமை மதியம் வரை தற்காலிகமாக வீதிகள் தடை செய்யப்படவுள்ளது. இதன் போது கந்தர்மடத்திலிருந்து அரசடி வீதியால் வரும் வாகனங்கள் பருத்தித்துறை வீதியூடாகவும் கோயில் வீதியால் நல்லூரை நோக்கி வரும் வாகனங்கள் சிவன் அம்மன் வீதியினூடாகவும் பயணிக்க முடியும்.

கோயில் தெற்கு வீதியின் ஊடாக கோயில் வீதியில் வரும் வாகனங்கள் பருத்தித்துறை வீதி ஊடாகவும் சங்கிலியன் வீதியால் வரும் வாகனங்கள் நல்லூர் பிரதேச செயலக வீதியினூடாகவும் பருத்தித்துறை வீதியை அடைந்து பயணிக்க முடியும்.

இதன்போது பொது மக்கள் மாற்றுப்பாதை ஒழுங்குகளைக் கடைப்பிடித்து ஒத்துழைப்பு வழங்குமாறு யாழ்.மாநகரசபை முதல்வர் வி.மதிவதனி கேட்டுக்கொண்டுள்ளார். (ம-7)

## ஓகஸ்ட் 18 ஆம் திகதி வரை பிள்ளையானுக்கு விளக்கமறியல்

(மட்டக்களப்பு)

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள முன்னாள் இராஜாங்க அமைச்சர் சிவநேசத்துரை சந்திரகாந்தன் (பிள்ளையான்), ஓகஸ்ட் 18 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஏ. தர்ஷினி முன்னிலையில் நேற்று குறித்த இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, அவர் காணொளி வழியே நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

2008 ஆம் ஆண்டு மட்டக்களப்பு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இடம்பெற்ற 5 கொலைச் சம்பவங்கள் தொடர்பாக முன்னாள் இராஜாங்க அமைச்சர் சிவநேசத்துரை சந்திரகாந்தன் உள்ளிட்ட சந்தேகநபர்களுக்கு எதிராக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினால் (CID) வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

அதில் அவர் 3 ஆம் சந்தேகநபராகப் பெயரிடப்பட்டுள்ளதுடன், கல்லடிப் பகுதியில் இடம்பெற்ற ஐந்து கொலைகள் மற்றும் காணிப் பிரச்சினை தொடர்பான மூன்று குற்றச்சாட்டுகள் அவருக்கு எதிராகச் சுமத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# எல் நினோவின் தாண்டவம் ஆரம்பம். அவதானம் தேவை!



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை, விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

அழிவு வருகின்றதென வானிலையாளர்கள் தொடர்ந்து எச்சரித்த வண்ணமேயிருக்கின்றனர். காலநிலை மாற்றம் இவ்வளவு காலமும் அதற்குரிய நிலையை பேணியதாகவே இருந்து வந்துள்ளது. ஆனால் காலநிலை மாற்றத்தின் அறிகுறிகள் விஸ்வரூபமெடுத்து இயற்கை அழிவாக "கோரத்தாண்டவம்" என்னும் நிலைக்கு வந்துள்ளதை தற்போதுள்ள காலநிலை மாற்றங்கள் உலகளாவிய ரீதியில் எடுத்தியம்பியுள்ளன. தென்னிலங்கையில் மழைவீழ்ச்சி அளவுக்கதிகமாக கட்டுக்கடங்காததாக அதிகரித்திருப்பதனால் பல இடங்களில் மண்சரிவு ஏற்பட்டிருக்கின்றதுடன் மக்கள் வெள்ளத்தில் அள்ளுண்ட செய்திகளும் வந்த வண்ணமிருக்கின்றன.

இந்நிலைமை முன்கூட்டியே அனுமானிக்கப்பட்டு பலவழிகளிலும் அறிவுறுத்தப்பட்ட போதிலும் அன்றாட வாழ்க்கையில் இன்னல்படும் மக்களால் அழிவினை உணர முடியாத நிலையில் இயற்கையின் சீற்றம் ஒருங்கிணைந்து பேரிடராக உருமாறியிருக்கின்றது. இன்னமும் அதனது அழிவுநிலை முழுமையாக எமது பகுதிகளில் வெளிக்கொணராத நிலையில் நாம் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் என்னும் கோரிக்கை வலுப்பெற்றிருக்கின்றது.


வட மாகாண ஆளுநர் அலுவலகத்தில் இதற்கென சிறப்பான கலந்துரையாடல் அனைத்து திணைக்களங்களின் பிரசன்னத்தோடு நடைபெற்று தொடர்ந்து எடுக்கப்பட வேண்டிய நடைமுறைகள் குறித்தும் விவசாயிகள் மக்கள் என பலருக்கும் ஆலோசனைகள் வழிகாட்டல்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

வளிவெப்பநிலை வழமைக்கு மாறாக அதிகரிக்கத் தொடங்கிவிட்டது. வளியின் ஈரப்பதனிலும் மாற்றங்கள் தெரிகின்றன. மக்கள் தற்போது உஷ்ணமான நிலைமையை உணரத் தொடங்கிவிட்டனர். அதீத வெப்பநிலையின் வெளிப்பாடாக உடலில் தானாகவே வியர்வை வெளிவருவதுடன் உடலில் எரிவுத்தன்மையும் ஏற்படத் தொடங்கியிருக்கின்றது. நேரடியாக மதியநேரத்தில் சூரிய ஒளி உடலில் படும்போது அதீத எரிச்சலை உணரத்தலைப்பட்டுள்ளனர்.

இது வளிவெப்பநிலையின் திடீர் அதிகரிப்பை உணர்த்துவதுடன் உடலினால் அந்த அதீத உயர்வை தாங்க முடியாமலிருப்பதையும் வெளிப்படுத்துகிறது. வெளியே தேவையின்றி செல்வதனை குறைத்துக் கொள்வதன் மூலம் இத்தகைய இடர்களிலிருந்து மக்கள் தங்களைக் காப்பாற்றிக் கொள்ள முடியும். வளியின் தன்மையில் ஈரப்பதன் குறைவடைந்து ஒரு காய்ந்த தன்மை வெளிப்படுகின்றது.

இதனால் தூசுத்துணிக்கைகள் வெளிக்கிளம்ப வாய்ப்பிருக்கின்றது. இவ்வளவு நிலைமை மாற்றத்திலும் அவ்வப்போது காற்று வேகமாக வீசும் நிலைமைகளை அவதானிக்கலாம். இது மேலும் தூசுத்துணிக்கைகளை வளிமண்டலத்தினுள் சேர்ப்பதனால் சுவாசப் பிரச்சினைகளும் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம். வருகின்ற செப்டம்பர் மாதம் வரை இந் நிலைமை தொடருமென எதிர்வு கூறப்பட்டுள்ளதால் மக்கள் அவசியமின்றி வெளிச் செல்வதை குறைத்துக் கொள்வதும் தம்மைத் தாமே காப்பாற்றிக் கொள்வதும் அவசியமாகின்றது.

## இனியொரு பசுமைப்புரட்சிக்கு...



வறண்ட வெப்பநிலை மேலும் அதிகரித்தால் தாவரங்களும் வாடிவிடும். குறிப்பாக அதிகரித்த வெப்பநிலை தென்னை போன்ற தாவரங்களுக்கு ஏற்புடையதல்ல. ஆவியுயிர்ப்பினை கட்டுப்படுத்த முடியாத நிலைமைக்குள் தள்ளப்படும் போது தென்னை போன்ற தாவரங்களால் ஆழ்நீரினை பெற முடியாமல் போகும். அப்போது தென்னை வாடும் நிலைமைக்கு வரும். நிலத்தடிநீர் குறைந்து செல்வதனை அந்தந்த வீடுகளின் கிணற்றைப் பார்த்தால் புரிந்துவிடும். வெப்பநிலை அதிகரித்து தென்னை மரங்கள் வறட்சியை உணரத் தொடங்கும் போது ஓலைகள் அனைத்தும் சோர்ந்து தென்னையில் தொங்கிக் கொள்ளும் குரும்பைகள் கொட்டுப்படும்.

குலைகளின் காம்புகள் வலிமையிழந்து தேங்காய்கள் சோர்வான நிலையில் தொங்கிக் கொள்ளும். காற்று வேகமாக அடிக்கும் போது இவை மரத்திலிருந்து கழன்று விழுந்திடவும் ஏதுவாகலாம். அந்நிலையில் தென்னை மரங்களை அழிவிலிருந்து காப்பாற்றிக் கொள்ள உயிர்நீர் கொடுக்கப்படல் அவசியமாகும். தாவரத்திலோ மனிதனிலோ வளிவெப்ப நிலை அதிகரித்து ஈரப்பதனும் குறைந்தால் நாமே அந்த வறட்சியை உணர்ந்து கொள்ள முடியும்.

உயிர் நீர் என்பது தாவரம் இறந்து போகாது பாதுகாக்கப்படுவதற்காக மரத்தினடியில் நீர் துளித்துளியாக வேர்த்தொகுதியை அடைந்து மரத்தின் நீர் தேவையை குறைந்தளவாவது கொடுப்பதற்கான முயற்சியாகும். இதற்காக பானை நீர்ப்பாய்ச்சுதல் (Pitcher irrigation) கொடுப்பதன் மூலம் ஓரளவுக்காகவது தென்ன மரங்களை காப்பாற்றிக் கொள்ள முடியும்.

ஒவ்வொரு தென்னை மரத்தினடியிலும் அடிப்பகுதியில் துளையிட்டு அதனுள் பஞ்சு அல்லது தும்புநார் என்பனவற்றை செருகிய பின்னர் ஒன்று அல்லது இரண்டு மட்பானைகளை நிலமட்டத்தில் அவற்றின் வாய்ப்பகுதியிருக்கத்தக்கதாக குழிகிண்டி அதனை உள் வைத்து மண்ணை நிரப்பிவிடவும். பானையினுள் தண்ணீரை ஊற்றி அதனை மூடிவிடவும் பானையிலிருந்து நீர் சிறிது சிறிதாக அதில் போடப்பட்டுள்ள துளையூடாக வெளிவந்து தென்னையின் வேர்ப்பகுதியை ஈரமாக வைத்திருப்பதால் தென்னை வாடும் நிலைக்கு செல்லாமல் காப்பாற்றப்பட்டு விடும். பானையிலுள்ள நீர் வற்றும் போது அதனுள் நீரை நிரப்பி இந்த எளிய நீர்ப்பாய்ச்சும் பொறிமுறையைத் தொடரலாம்.

இது வாடத்தொடங்கும் தென்னைகளை காப்பாற்றிக் கொள்ளும் பொறிமுறையாகும். அதீத வறட்சி இன்னும் இருமாதங்களுக்குள் என அறிவுறுத்தல்கள் வந்தவண்ணமிருப்பதனால் அவரவர் வீடுகளிலோ தோப்புகளிலோ இருக்கின்ற தென்னை மரங்களை வாடலிலிருந்து காப்பாற்றும் நடைமுறைகளை விரைந்து செய்தல் அவசியம். இது ஓரளவிற்கு அந்த வேரின் வறட்சியை தாக்கும் பிடிக்கும் நடைமுறையாகும்.

பானைக்கும் பதிலாக பலவிடங்களில் பிளாஸ்ரிக் போத்தல்களையும் பயன்படுத்துகின்றார்கள் என்றாலும் வெப்ப உயர்வின் பொது பிளாஸ்ரிக் போத்தல்களும் நீர் வற்றியநிலையில் சூடாவதற்கான சாத்தியக்கூறுகள் உண்டு. அனைத்தையும் அவதானித்து நீரை நிரப்பி குறிப்பாக தென்னை மரங்களை காப்பாற்றிக் கொள்வது நல்லது.

வடபகுதி முழுவதுமாக இயற்கைப் பேரிடரைப் பற்றி மக்களுக்கு அறிவூட்டல்கள் வழங்கப்பட்டிருக்கின்றன என்றாலும் மக்கள் இன்னமும் அந்த நிலைமைய உணராத நிலையே காணப்படுகின்றது. வாய்க்கால்கள் செப்பனிடப்பட்டு வெள்ளம் வழிந்தோடும் நிலைமைகள் உன்னிப்பான அவதானத்துக்குள் கொண்டுவரப்பட்டுள்ளன.

இருப்பினும் தாழ்வான பகுதிகளில் மழைவெள்ளம் விரைந்து உட்புகும் சாத்தியம் அதிகமாக தெரிகின்றது. எமது உயிர்காக்கும் தாவரங்களும் குறிப்பாக நிழலைத் தரும் தாவரங்களும் பாதிக்கப்படுவதனால் தாவரங்களை காப்பாற்றிக் கொள்ளும் நடைமுறைகளை கடைப்பிடித்தல் அவசியமாகும். ஆரம்பத்தில் நீரின்றி வறட்சியை தாங்க முடியாமல் தாவரங்கள் சோர்வடைந்து இறக்கும் நிலைமை அதிகரிக்கலாம்.

பின்னர் வெள்ள அனர்த்தம் ஏற்படும் போதும் தாவரங்கள் அழிவுக்குட்படலாம். வறட்சியை ஓரளவுக்கு தாங்கினாலும் வெள்ள அனர்த்தத்தை நாம் நினைத்தவாறு தாங்கிக் கொள்ள முடியாது. தாவரங்கள் விலங்குகள் இவற்றுடன் எம்மையும் காப்பாற்றிக் கொள்ளும் வழிமுறைகளை கடைப்பிடித்து நாம் இப்பேரிடரிலிருந்து வெளிவர அனைத்து முயற்சிகளையும் எடுப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## குட்டிமணி...

ஜூலை மாதம் ஏற்பாடுகள் செய்யப் பட்டிருந்தபொழுது,

முன்னாள் வல்வெட்டித்துறை நகர சபை உப தவிசாளர் சதீஸ் அவர் களைக் கைது செய்து நீதிமன்றில் முற் படுத்தியிருந்த நிலையில் இன்றுவரை குட்டிமணி, தங்கத்துரை ஆகியோருக்கு சிலை வைக்கத் தடை விதிக்கப்பட் டிருந்த நிலையில் நேற்று, வழக்கு நீதி மன்றில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்நிலையில் அரச சட்டத்தரணி யால் புலனாய்வு அறிக்கை சமர்ப்பிப்ப தற்குக் காலம் கோரப்பட்ட நிலையில் இன்றையதினம் (05.08.2026) வரை வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதுடன் சிலை நிறுவுவதற்கும் தற்காலிகத் தடை விதிக்கபட்டுள்ளது.

மூத்த சட்டத்தரணி ஸ்ரீகாந்தா, விஸ்வலிங்கம் மணிவண்ணன் உட் பட்ட ஐந்து சட்டத்தரணிகள் நேற்றைய தினம் நீதிமன்றில் வல்வெட்டித்துறை உபதவிசாளர் கந்தசாமி சதீஸ் சார் பில் மன்றில் முன்னிலை ஆகியிருந்த னர். (ம-7,23,60)

## மன்னாரில்...

கப் பெற்ற தகவலின் அடிப்படையில் நேற்று முன்தினம் (3) மாலை விரைந்து செயற்பட்ட பொலிஸ் நிலை குற்றத் தடுப்புப் பிரிவினர் தாழ்வுபாடு கிராமத் திலுள்ள வீடு ஒன்றில் சோதனையிட் டனர்.

இதன் போது குறித்த வீட்டில் பதுக்கி வைத்திருந்த பல இலட்சம் ரூபாய் பெறுமதியான 9 கிலோ 400 கிராம் எடை கொண்ட கேரளக் கஞ்சா பொதிகளை கைப்பற்றியதோடு சந்தேக நபர் ஒருவரையும் கைது செய்தனர்.

கைப்பற்றப்பட்ட கஞ்சாப் பொதிகள் மற்றும் கைது செய்யப்பட்ட நபர் மன் னார் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக் கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை மன் னார் பொலிஸார் மேற்கொண்டு வரு கின்றனர். (ம-7)

## புலமைப்பரிசில்...

வளிமண்டலவியல் திணைக்களம், அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலை யம் மற்றும் பரீட்சைத் திணைக்களம் ஆகியவற்றின் பிரதிநிதிகளுக்கு இடையே குறித்த கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

நிலவும் மழைக்கால வானிலையு டன் பரீட்சைப் பணிகள் தொடர்பாக மேற் கொள்ளப்பட வேண்டிய அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து இதன்போது கலந்துரையாடப்படவுள்ளதாக வளி மண்டலவியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அஜித் விஜே மான்ன தெரிவித்தார்.

உயர்தரப் பரீட்சையுடன் அப்பகுதி யில் ஏற்படும் நிலைமைகள் குறித்து கலந்துரையாடுவதற்காகப் பரீட்சைத் திணைக்களம் மற்றும் அனர்த்த முகா மைத்துவ மத்திய நிலையத்துடன் இணைந்து 5 ஆம் திகதி சந்திப் பொன்றை ஏற்பாடு செய்துள்ளோம்.

அங்கு இதற்கு எவ்வாறு முகங் கொடுப்பது என்பது குறித்து நாங்கள் தயாராகி வருகிறோம். ஒட்டுமொத்த மாகப் பார்த்தால் ஓகஸ்ட் மாதம் மழை குறைவான காலமாகும். எனி னும் பருவக்காற்று தீவிரமடைந்துள் ளமையால் இது ஒரு தற்காலிக நிகழ் வாகும். அத்துடன் 6, 7 மற்றும் 8ஆம் திகதிகளுக்குப் பிறகு மழை சற்றுக் குறையும். எப்படியும் பரீட்சை 10ஆம் திகதிக்குப் பிறகே உள்ளது என்ப தால், அந்த நேரத்திற்குள் இந்தத் தாக்கம் பெருமளவில் குறைந்து விடும் என்றார். (ம-7)

## நேற்றைய அகழ்வில்...

நீதிபதி எஸ்.லெனின்குமார் தலைமை யில் ஆரம்பமாகியது.

செம்மணிப் புதைகுழி அகழ்வின் மூன்றாம் கட்ட அகழ்வுப் பணியை முன்னெடுக்க யாழ்ப்பாண நீதிமன்றம் 56 நாட்கள் அனுமதியளித்திருந்ததன் பிரகாரம் 43 ஆம் நாள் அகழ்வுப் பணி கள் நேற்றைய தினம் முன்னெடுக்கப் பட்டிருந்தது.

அகழ்வுப் பணிகள் குறித்து சட்டத் தரணி வி.எஸ்.நிரஞ்சன் ஊடகங் களுக்குக் கருத்துரைத்ததாவது,

நேற்றுப் புதிதாக 4 என்புக் கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் அவற்றில் 2 மனித என்புக் கூட்டுத் தொகுதிகள் முழுமையாக அகழ்ந் தெடுக்கப்பட்டுள்ளன.

அத்துடன் 39 ஆம் இலக்க என்புக் குவியலும் அகழ்ந்தெடுக்கப்பட்டுள் ளன.

அத்துடன் முன்னர் அடையாளப் படுத்தப்பட்டிருந்த மழை அங்கியுட னான 467 ஆம் இலக்க என்புக் கூடும் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

அதிலிருந்து பிரசான்றுப்பொருட் களாக அங்கியும் அங்கியுடன் காணப் பட்ட பொத்தான் ஒன்றும் காலுறை (சொக்ஸ்) ஒரு சோடியும் அடையாளப் படுத்தப்பட்டுள்ளன.

குறித்த 56 நாள் அகழ்வுப் பணிக் காக 2 கோடியே 22 இலட்சத்து 50 ஆயி ரம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ள நிலை யில் 44 ஆம் நாள் அகழ்வுப் பணிகள் இன்று இடம்பெறவுள்ளன.

அகழ்வுப் பணிகளை பேராசிரியர் ராஜ் சோமதேவ, சட்ட வைத்திய அதி காரி செல்லையா பிரணவன், தடயவி யல் பொலிஸார் (SOCO) ஆகியோரின் பங்குபற்றலுடன் அகழ்வுப் பணி கள் முன்னெடுக்கப்படுகின்றன எனத் தெரிவித்தார்.

மேலும் செம் மணிப் புதைகுழி வழக்கு இன்று புதன் கிழமை செம்மணிப் புதை குழி அமைந் துள்ள பகுதியில் திறந்த மன்றில் அழைக்கப்பட வுள்ள நிலையில் அறிக்கைகள் பல சமர்ப்பிக்கப் படும் என எதிர்பா ர்க்கப்படுகிறது.

செம் மணிப் புதைகுழி வழக்கு கடந்த 23ஆம் திகதி விசார ணைக்கு எடுத் துக் கொள்ளப் பட்ட போது, குற் றப் புலனாய்வுப் பிரிவினரால் இந் தப் பகுதியில் குற் றமொன்று நடந் தது என்பது தெளி வாகவில்லை. எனவே மீட்கப் பட்ட என்புக்கூடு கள் தொடர்பில் காலத்தை அறி வதற்கு பரிசோ தனை செய்யப் பட வேண்டும் என மன்றில் விண்ணப்பம் செய் திருந்தனர்.

அதேவேளை இதுவரை எடுத்த பிற பொருட்க ளுக்கான அறிக் கையை ராஜ சோமதேவாவி டம் இருந்து பெற் றுக்கொள்ளதென் றும் தொடர்ந்து இது சம்பந்தமாக ஒரு குழு ஒன்று அமைத்து, எதிர் காலத்தில் எவ் வாறான பரிசோ தனை செய்வது தொடர்பாக நிபு ணர் குழுவும் சட் டத்தரணிகளும் இணைந்திருப் [illegible] நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை க்கு எடுக்கப்படும் போது தீர்மானிப்ப தாகத் தீர்மானிக்கப்பட்டது.

அத்தோடு, இன்னும் கிடைக்கப் பெறாமல் இருக்கும் மண் மாதிரிக் கான அறிக்கையைப் பெற்றுக்கொள் வதும் பல்கலைக்கழகத்திடமிருந்தும் ஒருசில அறிக்கைகள் கோரப்பட்டிருந் தது. அது சம்பந்தமான அறிக்கை களைப் பெற்றுக்கொள்வதற்கும் மன்று கட்டளையிட்டுள்ளது.

இந்நிலையில் இன்று புதன்கிழமை வழக்கு அழைக்கப்படவுள்ளது. (ம-7,33)

## காரைநகரில்...

இதில் காரைநகர் கருங்காலிப் பகுதி யைச் சேர்ந்த குமாரன் மகேந்திரலிங்கம் (வயது - 66) என்பவரே உயிரிழந்தவராவார்.

துவிச்சக்கரவண்டியில் பயணித்த குறித்த குடும்பஸ்தர் மீது மோட்டார் சைக்கிள் மோதியதில் குறித்த விபரீ தம் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் ஊர்காவற்றுறைப் பொலிஸார் மேலதிக விசாரணை களை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,104)


மஹஜன சம்பத
திகதி 2026.08.04
சீட்டிழுப்பு இலக்கம் 6269
S 0 8 9 1 3 8
அத சம்பத
S 9 1 3 8
சீட்டிழுப்பு இலக்கம் 0844

சுப தவசக்
திகதி 2026.08.04
சீட்டிழுப்பு இலக்கம் 0385
மகரம் 14 24 54
2361

தன நிதானய
திகதி - 2026.08.04
சீட்டிழுப்பு இலக்கம் - 2299
P 25 66 73 80 P

மெகா பவர்
திகதி 04/08/2026
சீட்டிழுப்பு இலக்கம் 2617
L 23 13 26 36 57

ஜய
திகதி 2026.08.04
சீட்டிழுப்பு இலக்கம் 0537
I 5 2 8 1

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4511
சீட்டிழுப்பு திகதி 04.08.2026
K 23 30 50 64

ஹந்தஹன HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2026.08.04
சீட்டிழுப்பு இலக்கம் 1578
மீனம் 04 09 18 45 மீனம்

உத்தியோகபூர்வ முடிவுகள்
04.08.2026 0977
T 9 2 5 4 4 8
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 25,852,709.60
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 3243
25000 பணப் பரிசு 31949
சீட்டிழுப்பு திகதி 2026.08.04 தினம் செவ்வாய்க்கிழமை
08 47 50 65 J
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 64,391,101.60
DLB

சனிதா
திகதி 04.08.2026 வெற்றி வாரம் 5404
01 05 15 80 S
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 52,320,151.60
34048
DLB

சசிரி
வெற்றி வாரம் 1073
சீட்டிழுப்பு திகதி 04.08.2026
செவ்வாய்க்கிழமை
19 44 45
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,881,120.00
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4955
சீட்டிழுப்பு திகதி 04.08.2026 தினம் செவ்வாய்க்கிழமை
01 12 22 55 மிதுனம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,331,936.40
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
Q 38 15 16 40 45
2419
04.08.2026
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 331,473,703.00
DLB

செவ்வாய்க்கிழமை
வெற்றி வாரம்: 3069
சீட்டிழுப்பு திகதி: 2026.08.04
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 62,642,008.00
அத கோடிபதி ADA KOTIPATHI
38 40 51 53 O
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## பலாலி...

குவதற்கான கலந்துரையாடல் குழப்பத்துடன் முடிவடைந்தது.

யாழ்ப்பாணம் பலாலி விமான நிலைய விஸ்தரிப்பு அபிவிருத்தித் திட்டத்திற்காக சுவீகரிக்கப்பட்ட காணி உரிமையாளர்களுக்கு இழப்பீடு வழங்குவது தொடர்பான கலந்துரையாடல் நேற்று வலிகாமம் வடக்கு தெல்லிப் பழை பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

தெல்லிப்பழை பிரதேச செயலாளர் திருமதி சிவகெங்கா சுதீஸ்னர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

வலிகாமம் வடக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பலாலி மேற்கு, மயிலிட்டி வடக்கு, தென்மயிலை மற்றும் குரும்பசிட்டி ஆகிய நான்கு கிராம சேவகர் பிரிவுகளில், 1986ஆம் ஆண்டு பலாலி விமான நிலைய விரிவாக்கத்திற்காக வர்த்தமானி அறிவித்தல் மூலம் சுவீகரிக்கப்பட்ட 267 ஏக்கர் காணிகளின் 436 காணி உரிமையாளர்கள் கலந்துரையாடலுக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

1986ஆம் ஆண்டு சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்கு 2022ஆம் ஆண்டின் மதிப்பீட்டின் அடிப்படையில் இழப்பீடு வழங்கப்படும் என அதிகாரிகள் தெரிவித்தனர். தொடர்ந்து இழப்பீடு வழங்குவதற்கான சத்தியக் கடதாசியில் கையொப்பமிடுமாறு காணி உரிமையாளர்களிடம் கோரப்பட்டது.

எனினும் ஒவ்வொரு காணிக்கும் நிர்ணயிக்கப்பட்ட மதிப்பீட்டு விபரங்கள் வழங்கப்படாத நிலை யில் சத்தியக் கடதாசியில் கையொப்பமிட முடியாது என காணி உரிமையாளர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

மேலும் சத்தியக்கடதாசியின் உள்ளடக்கம் தெளிவற்ற தாக இருப்பதாகவும் அவர்கள் சுட்டிக் காட்டியதால் கூட்டத்தில் பரபரப்பும் குழப்ப நிலையும் ஏற்பட்டது.

குழப்பநிலை தீவிரமடைந்ததைத் தொடர்ந்து, கூட்ட மண்டபத்திற்குள் பொலிஸார் வரவழைக்கப்பட்டனர். பின்னர் அதிகாரி கள் மற்றும்மக்களுக்கிடையே இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர், காணி உரிமை யாளர்கள் தரப்பில் ஏழு பேர் கொண்ட குழு வொன்று அமைக்கப்பட்டு, அவர்களின் ஆலோசனைக்கு அமைவாக சத்தியக் கடதாசியில் திருத்தங்கள் மேற் கொள்ளப்பட்டு, அவை காணிமதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்ட பின்னர் மீண்டும் காணி உரிமையாளர்களை அழைப்பது எனத் தீர்மானிக்கப்பட்டது.

எனினும் சில காணி உரிமையாளர்கள் இழப்பீடு பெறுவதில் இணக்கம் தெரிவிக்காமல் கூட்டத்திலிருந்து வெளியேறினர். அவர்கள் தங்களுக்கு இழப்பீடு மட்டும் வழங் காமல், காணிகளை மீள வழங்கி மீளக் குடியேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், அதன் பின்னரே விமான நிலையத் தேவைக்காகக் காணிகளை வழங்குவது குறித்து பரிசீலிக்க முடியும் என்றும் வலியுறுத்தினர்.

மேலும் சத்தியக்கடதாசியில் தெளிவின்மை காணப்பட்டதே மக்களிடையே நம்பிக்கையின்மையையும் குழப்பத்தையும் ஏற்படுத்தியதாகக் காணி உரிமையாளர் கள் தெரிவித்தனர். (ம-7,33,104)

## நிரந்தர...

தமிழ் மக்களுக்கு நிரந்தரமான அரசியல் தீர்வொன்று அவசியம் என இந்திய உயர்ஸ்தானிகரிடம் 6 தமிழ் பேசும் கட்சிகள் வலியுறுத்தியுள்ளன.

தமிழ் பேசும் ஆறு அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜாவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று நடைபெற்றது.

இந்தச் சந்திப்பின் போது, தமிழ் மக்களின் அரசியல் உரிமைகள், அதிகாரப் பகிர்வு, வடக்கு மற்றும் கிழக்கின் அபிவிருத்தி, நல்லிணக்கம் மற்றும் நீடித்த அரசியல் தீர்வு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து கருத்துகள் பரிமாறப்பட்டன.

மேலும் இந்தியா - இலங்கை கூட்டுப்பங்களிப்பில் முன்னெடுக்கப்படும் பல்வேறு நலத்திட்டங்கள் மற்றும் இரு நாடுகளுக்கு இடையிலான இருதரப்பு உறவுகள் குறித்தும் இச்சந்திப்பில் விரிவாகக் கலந்தாலோசிக்கப்பட்டது.

(ம-7)

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-6173)

076 825 7716 (ஆகாஸ்)

மணப்பெண் தேவை

1. சுன்னாகம், இந்து, 1993, அனுசம், MBA, UK Electronic Engineering Moratuva University மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (57017).
2. மாதகல், இந்து, 1991, பரணி, Engineering (UK), Managment officer, UK Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.(53670)
3. அச்சுவேலி - புத்தூர், இந்து, 1986, பூரட்டாதி, B.Eng electrical and Electonic (ICBT), Electrical Engineer மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (51945)
4. உடுவில், இந்து, 1993, பூரம், B.Eng (Hons) in Civil and Structural, Project Engineer, Singapore மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (52945)
5. யாழ்., Roman Catholic, 1980, BBM. Manager, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை (57444)
6. யாழ். Town, இந்து, 1994, திருவோணம், BSc in Mechanical Engineering, MSc (Canda), Mechanical Engineer, Canada Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (54640).
7. பருத்தித்துறை, இந்து, 1981, கேட்டை, BSc in Network Engineering, UK Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை (53849).
8. தெல்லிப்பழை, இந்து, 1996, சித்திரை, Master of Business Management, Government Job, Newzealand citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (36133).
9. யாழ்.Town, இந்து, 1991, உத்தரம், CIMA fully qualified, Canada citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.(29780)
10. உடுப்பிட்டி, இந்து, 1995, மகம், Bechelor of Business Management, Banker மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (56018)

நீங்களாகவே எமது www.thaalee.com என்கின்ற website இல் உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொள்ளலாம். Unmarried, Divorce என்பன உண்டு. (8312)

S.Sharma J.P
www.thaalee.com
077 539 3728
077 992 1494

மணமகன் தேவை

1982ம் ஆண்டு பிறந்த விவாகரத்தான மற்றும் 1993ம் ஆண்டு பிறந்த பெண் இருவருக்கும் படித்த மணமகன் தேவை. சூரிய செவ் மணமகள் வேண்டும். (2555)

077 889 4353
076 475 2219

புதிய பிரிவுகள் ஆரம்பம்
08.08.2026


தொழிற்துறைக் கணக்காளர் ஆவதற்கு
aat (Sri Lanka)
(AAI, AA2, AA3)
Qualification :- G.C.E O/L 6 Passes
(Medium - Tamil & English)

A/L மாணவர்களின் நலன் கருதி வார நாட்களிலும் aat வகுப்புக்கள் நடாத்த தீர்மானித்துள்ளோம்.

கணக்காளர் கற்கைநெறிகள்
Chartered Accounting Courses
"New Syllabus" - Business Level
Qualification :- G.C.E A/L 3 Passes
(Medium - Tamil & English)

Further Details :- Jaffna College
Undergraduate Dept..
464, Hospital Road, Jaffna.
(யாழ்.ஆஸ்பத்திரி வீதியில், கொமர்ஷல் வங்கி அருகில்)
021 222 3382 / 0774405917
(C-6171)

## மரண அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 1959 - 08 - 15 |  | 2026 - 08 - 03 |

## சிற்சபேசன் கேந்திரகுமார்

இணுவில் யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் கேணியடியை வசிப்பிடமாகவும் கொண்ட சிற்சபேசன் கேந்திரகுமார் அவர்கள் கடந்த (03.08.2026) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிற்சபேசன் - கனகராணி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சபாரட்ணம் - அண்ணலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும் பத்மராணியின் அன்புக் கணவரும் றாஜ்குமார், நபியா, றஜீவ்குமார் (பிரான்ஸ்), சோபிகா (பிரான்ஸ்), கோபிகா (லண்டன்), செளமிகா, சரத்குமார் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற சந்திரகுமார் மற்றும் வக்ஸலா, கௌசலா, சியாமளா ஆகியோரின் அன்புச் சகோதரனும் மயூரன் (நல்லூர் தவிசாளர்), ரஜீனா, சுபாஜினி (பிரான்ஸ்), சதீஸ் (பிரான்ஸ்), மயூரன்(லண்டன்), சிந்துஜன் ஆகியோரின் அன்பு மாமனாரும் சமிகா, கஸ்மிகா, அஹணா, ஆருத்ரா, அக்ஷரா, ப்ரித்திகா, அகரன், ஆதிரா, ஆரியன், ஆருஸ், தமிழவன், மருஷன், அக்ஷயா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (05.08.2026) புதன்கிழமை மதியம் 1.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 2.00 மணியளவில் கோம்பயன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தபாற்கந்தோர் வீதி,
ஆனைக்கோட்டை. (2557)

தகவல் : குடும்பத்தினர்
077 727 7527

பதவி வெற்றிடங்கள்

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு தனியார்
பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேவை (ஆண், பெண்)

- க.பொ.த சாதாரண தரத்தில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
- உடல், உள தகுதி சீராக இருத்தல் வேண்டும்.
- வயதெல்லை 20 இலிருந்து 50 வயது வரை

தேவையான ஆவணங்கள்

1. தேசிய அடையாள அட்டைப் பிரதி
2. கிராம சேவையாளரது நற்சான்றிதழ் (ஆறு மாதங்களுக்கு உட்பட்டது)

நேர்முகத்தேர்வு

இடம் : 758, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
காலம் : 06.08.2026 தொடக்கம் 16.08.2026 வரை (ஞாயிறு தவிர்ந்த)
நேரம் : காலை 9.00 மணியிலிருந்து மாலை 4.00 மணிவரை

குறிப்பு: சம்பள நிர்ணய சபையினால் அங்கீரிக்கப்பட்ட சம்பளம் மற்றும் ஊழியர் சேமலாப நிதி, நம்பிக்கை நிதியம் என்பன வழங்கப்படும். (C-6172)

T.P: 021 222 5102

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.08.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media